எஸ்ஸன்ஸ் ஆஃப் இஸ்லாம் 'தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்' (தொடர்-6) பக்கம் 3

அருளுக்குரிய கிலாஃபத்தின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றங்கள் (தொடர்ச்சி...) பக்கம் 11

இறையிருப்பிற்கான இன்றைய சான்றுகள் பக்கம் 16

கிலாஃபத்தின் நிழலின் கீழ் பரஸ்பர அனுதாபம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் முக்கியத்துவமும் நமது பொறுப்பும் பக்கம் 21

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | September 2025 | Vol. 4 - Issue No. 10
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311





# திருக்குர்ஆன்

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ ١

قُلۡ هُوَ ٱللَّهُ أَحَدٌ ٢

ٱللَّهُ ٱلصَّمَدُ ٣

لَمۡ يَلِدۡ وَلَمۡ يُولَدۡ ٤

وَلَمۡ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدُۢ ٥

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகின்றேன்.)

(எல்லாக் கால முஸ்லிம்களிடமும் நாம் கூறுகிறோம்:) நீர் (மற்றவர்களிடம்) கூறுவீராக! (உண்மையில்) அல்லாஹ் ஒருவனே ஆவான்.

அல்லாஹ் (எந்தத்) தேவை(யும்) அற்றவன். (எல்லாவற்றிற்கும், அவன் தேவையானவன்.)

அவன் எவரையும் பெறவில்லை; அவன் எவராலும் பெறப்படவுமில்லை.

(அவனது பண்புகளில்) அவனுக்கு இணை எவரும் இல்லை. (114:1–5)



# ஹதீஸ்

وعن أبي هريرة رضي الله عنه
أن رسول الله صلى الله عليه وسلم
قال في:{ قل هو الله أحد}
"إنها تعدل ثلث القرآن". ((رواه مسلم)).

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்–கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சூரா அல் இக்லாஸ் (112–வது அதிகாரம்) திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதிக்குச் சமமானதாகும். (முஸ்லிம் ரியாதுஸ் ஸாலிஹீன் 1012)

# ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களிலிருந்து எஸ்ஸென்ஸ் ஆஃப் இஸ்லாம் 6

தொகுதி 1

# தூய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்

அதிகாரம் 3


தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

## தூய நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்கள் மீதான அல்லாஹ்வின் அருள்கள்:

ஒரு சாதாரண பின்பற்றுபவர் எவ்வாறு அந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதர் அவர்களின் பெயர்கள், பண்புகள் மற்றும் புகழ்களில் பங்கு பெற முடியும் என்று நாம் ஒருபோதும் மனதில் சந்தேகப்படக் கூடாது. நிச்சயமாகவே, ஒரு நபியே கூட புனித நபி (ஸல்) அவர்களின் புனித மேன்மைகளில் சமமாக பங்கு பெற முடியாது. அனைத்து மலக்குகளுமே கூட அதற்கு உரிமை கோர முடியாத அளவுக்கு அவர்களுடைய நிலை உயர்ந்தது. அப்படியிருக்க, வேறு எவரும் அவருடைய மேன்மைகளில் பங்கு பெறுவது இயலாது.

ஆனால், உண்மையைத் தேடுகிறவரே, அல்லாஹ் உங்களுக்கு நல்வழி காட்டுவானாக. இதனை கவனமாகக் கேளுங்கள்: அந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட நபி (ஸல்) அவர்களின் அருட்கள் என்றும் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவும், அவர்களுடைய ஒளியின் முழுமையான கதிர்கள் எதிரிகளை முறியடிக்க வேண்டும் என்பதற்காகவும், அல்லாஹ் தனது ஞானம் மற்றும் கருணையைக் கொண்டு ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறான்.

முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களில் சிலர், மிகுந்த தாழ்மையுடன் அவருக்குச் சேவை புரிந்து, தங்கள் அகங்காரத்தை முற்றிலும் ஒழித்து, தாழ்மையின் கதவின் முன் சஜ்தா செய்வதன் மூலம், தங்களைத் தாங்களே முற்றிலும் மறந்து, ஒரு தெளிவான கண்ணாடி போலத் தோன்றுகிறார்கள். இவ்வாறு இருப்பவர்களிடமே அல்லாஹ், புனித நபி (ஸல்) அவர்களின் அருட்களை வெளிப்படுத்துகிறான். அவர்களுக்குப் பகிரப்படும் எல்லா புகழுக்கும், அவர்களிடமிருந்து வெளிப்படும் எல்லா அடையாளங்களுக்கும், அருட்களுக்கும் அனைத்திற்கும் உண்மையான ஆதாரமாகவும், பரிபூரண மூலாதாரமுமாக




இருப்பவர் புனித நபி (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள்.

உண்மையில், அந்தப் புகழ்கள் அவற்றின் பூரணத் தன்மையுடன் அன்னாருக்கே உரியவை. அன்னார்தான் அந்தப் புகழ்களின் சிறந்த முன்மாதிரி. ஆனால், புனித நபி (ஸல்) அவர்களின் வழியைப் பின்பற்றும் ஒருவர், அன்னாருக்குச் சிறப்பாக கீழ்ப்படிதலின் மூலம், அவர்களுடைய பிரதிபலிப்பாக மாறும்போது, புனித நபி (ஸல்) அவர்களின் புனித ஆன்மாவில் வெளிப்பட்ட இறைஒளிகள், அவர்களைப் பின்பற்றுபவர்களிடமும் வெளிப்படுகின்றன.

ஒரு நிழல், அதன் அசலின் உருவத்தையும் அதன் உண்மை நிலையையும் பிரதிபலிப்பது எவருக்கும் மறைக்கப்பட்ட விஷயம் அல்ல. அந்த நிழலுக்குத் தனித்து எதுவும் இல்லை. அதில் வெளிப்படும் அனைத்தும் அசலின் உருவமே ஆகும். எனவே, புனித நபி (ஸல்) அவர்களின் உள்ஒளிகள், அன்னாரை முற்றிலும் கீழ்ப்படிந்து பின்பற்றுகிறவர்களிடம் சேரும் போது, அதில் எவ்வித இழப்பும் ஏற்பட்டு விடும் எனக் கருதாதீர்கள்.

இந்த ஒளிப் பிரதிபலிப்பினால், நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்கள் சிலரிடம் நிரந்தர அருளைப் போல இரண்டு பெரிய விளைவுகள் நிகழ்கின்றன:

1) புனித நபி அவர்களின் உன்னதமான மேன்மை வெளிப்படுகிறது. ஏனெனில், மற்ற விளக்குகளை ஏற்றி, தொடர்ந்து ஏற்றி வைக்கும் தீப்பந்தம், மற்றொரு தீப்பந்தத்தை எரிய வைக்க முடியாத தீப்பந்தத்தை விட நிச்சயமாகச் சிறந்ததே.

2) முஸ்லிம்களின் மேன்மையும், அவர்கள் மற்ற மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களை விடச் சிறந்தவர்கள் என்ற அவர்களின் மேலான நிலையும் உறுதியாகிறது. இவ்வாறு, பழைய காலங்களில் நிகழ்ந்தவற்றையே நம்பி இருக்காமல் இஸ்லாத்தின் உண்மைத் தன்மையின் சான்றுகள் மீண்டும் மீண்டும் புதிதாய் வெளிப்படுகின்றன.

இதுவே குர்ஆனின் உண்மையின் ஒளிகள் சூரியனைப் போல் ஒளிரும் விதமாகும். இவ்வாறு இஸ்லாத்தின் சான்றுகள் எதிரிகளுக்கு எதிராக உறுதியாக நிறுவப்படுகின்றன, மேலும், இஸ்லாத்தின் பகைவர்கள் அவமானத்திலும், இழிவிலும், தோல்வியிலும் வீழ்த்தப்படுகின்றனர்.

அவர்கள் தங்கள் மார்க்கத்தின் சான்றோர்-களிடமோ, பண்டிதர்களிடமோ காண முடியாத அருட்களையும், ஒளியையும் இஸ்லாத்தில் காண்கிறார்கள்.

இதை நன்றாகச் சிந்தியுங்கள், உண்மையை நாடுகிறவரே! அல்லாஹ் உங்களுக்கு உதவுவானாக.....

எவ்வளவு உயர்ந்தது அந்த காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் நிலை! எவ்வளவு சிறந்தது! இந்த நீதியின் சூரியனின் ஒளிவீச்சு! அன்னாருக்கு கீழ்ப்படிவதனால் ஒருவர் ஒரு முழுமையான மு.்.மீனாக மாறுகிறார். இன்னொருவர் இறைவனை அறிபவராக (ஆரி.்.ப்) மாறுகிறார். மற்றொருவருக்கு அல்லாஹ்வின் அடையாளம் (ஆயத்துல்லாஹ்) - அல்லாஹ்வின் சான்று (ஹுஜ்ஜத்துல்லாஹ்) என்ற உயர்ந்த நிலை அளிக்கப்-படுகிறது மேலும், அனைவரையும் இறைப்புகழ் அருளப்-படுபவர்களாக ஆக்குகிறது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயீன், தொகுதி 1 பக்கம் 268-271 குறிப்பு 1)

புனித நபி (ஸல்) அவர்கள் உண்மையின் சூரியனாக உலகில் தோன்றிய நாள் முதல் இன்று வரை, தகுதி படைத்த ஆயிரக்கணக்கானவர்கள், இறைவசனத்தைப் பின்பற்றியும், புனித நபி (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிந்தும், நாம் குறிப்பிட்டுள்ள அந்த உயர்ந்த நிலைகளை எட்டியுள்ளனர். மேலும் தொடர்ந்து அதனை அடைந்து கொண்டே வருகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு இடைவிடாமல் அருள்கள், நற்பேறுகள், ஆதரவுகள், உதவிகள் அனைத்தையும் வழங்கியதால், தெளிவான பார்வையுடையோருக்கு தெளிவாகவே அது தெரிய வருகிறது. அதாவது இவர்கள் அல்லாஹ்வின் சிறப்பு பெற்ற பிரியமானவர்-களாக இருக்கின்றனர். அவர்கள் இறைஅருளின் பெரிய நிழலில் இருக்கின்றனர். மேலும் மிகுந்த அருள் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.



அவர்களைப் பார்க்கும் அனைவரும் தெளிவாக உணர்கிறார்கள்: அவர்கள் விசித்திரமான அருள்களால் கௌரவிக்கப்படுபவர்கள் அற்புதமான அடையாளங்-களால் வேறுபடுத்தப்பட்டவர்கள் அன்பின் மணத்தால் நறுமணமடைந்தவர்கள் அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக பெருமை பெறுபவர்கள்.

அல்லாஹ்வின் ஒளி, அவர்களின் நட்பிலும், கவனத்திலும், மன உறுதியிலும், நற்குணங்களிலும், வாழ்வியல் முறையிலும், மகிழ்ச்சியிலும், கோபத்திலும், விருப்பத்திலும், வெறுப்பிலும், நடப்பதிலும், ஓய்விலும், பேச்சிலும், மவுனத்திலும், அவர்களின் வெளிப்புறம், உட்புறம் இரண்டிலும் நறுமண வாசனை நிறைந்த ஒரு தெள்ளத்தெளிந்த கண்ணாடி குமிழ் போலநிறைந்து ஒளிர்கிறது.

மிகுந்த முயற்சியாலும் கூட அடைய முடியாத ஒன்று அவர்களின் நட்பாலும், தொடர்பாலும், அன்பாலும், எளிதில் அடையப்படுகிறது. அவர்களுடன் உறவு அமைத்து, நல்லெண்ணம் கொள்வதால், ஒருவரின் ஈமான் புதிய நிறம் பெற்று, நல்ல குணங்களை வெளிப்படுத்த வலிமை கிடைக்கிறது.. ந.்.ப்ஸின் ஆரவாரங்கள், தீய விருப்பங்கள் கட்டுப்படத் தொடங்குகின்றன. மனநிறைவு, இனிமை உருவாகின்றன. ஒருவரின் திறனைப் பொறுத்து, ஈமானின் ஆர்வம்

பெருகுகிறது. அன்பும் அர்ப்பணிப்பும் வெளிப்படுகின்றன. அல்லாஹ்வை நினைவு கூர்வதில் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. இவர்களுடன் நீண்ட காலமாக தொடர்பில் இருப்பவர் கட்டாயமாக ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கும்: அவர்களுடைய ஈமானிய வலிமை, நற்குணங்கள், உலகை விட்டு விலகிய நிலை, அல்லாஹ்வை நோக்கிய கவனம், இறைஅன்பு, படைப்புகளுக்கான கருணை, நாணயம், அல்லாஹ்வின் விதியை ஏற்றுக் கொள்வது, பொறுமை போன்றவற்றில், அவர்களுக்கு இணையாக உலகில் எவரும் இல்லாத அளவிற்கு உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். விலங்குகளாலும் சங்கிலிகளாலும் மற்றவர்கள் கட்டப்பட்டிருக்க இவர்களின் கால்களிலிருந்து அவை அகற்றப்பட்டுள்ளன என்பதையும் மற்றவர்களின் மனங்களில் இருக்கும் குறுகிய மனநிலை, சோர்வு ஆகியவை இவர்களிடமிருந்து நீக்கப்பட்டு விட்டன



என்பதையும் சரியான அறிவு உடனே உணர்ந்து கொள்கிறது. அவர்கள் அல்லாஹ்வுடன் இடைவிடாது உரையாடுகிற கவுரவத்தைப் பெற்றுள்ளனர். மேலும் அல்லாஹ்விற்கும் அவனது ஆர்வமிக்க அடியார் -களுக்கும் இடையே வழிகாட்டலைப் பெறும் ஒரு கருவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களின் ஒளி மற்றவர்களின் இதயங்களை ஒளிரச் செய்கிறது.

வசந்த காலம் வரும்போது மரங்கள், செடிகள் மலர்வது போலவே, இப்படிப்பட்ட புனிதர்களின் வருகையால், தூய ஆன்மாக்களில் இயல்பான ஒளிகள் பெருகுகின்றன. ஒவ்வொரு நற்பேறு பெற்றவரின் உள்ளமும் தன் திறன்களை வெளிப்படுத்த வேண்டும் என விரும்புகிறது. ஆழ்ந்த தூக்கத்தின் திரைகள் அதிலிருந்து விலக்கப்படுகின்றன. பாவம், தீமைக்கான கறைகள், அறியாமையின் இருள் ஆகியவற்றிலிருந்து அது விடுதலை பெறுகிறது.

அவர்களின் பாக்கியமிகு காலம் அப்படிப்பட்ட சிறப்புடையதாக இருக்கிறது. அதில் ஒளி பரவி ஒளிர்கிறது. ஒவ்வொரு நம்பிக்கையாளரும், உண்மையை நாடுபவரும், தத்தமது ஈமானின் வலிமையைப் பொறுத்து, வெளிப்படையான காரணமின்றியே தன் உள்ளத்தில் ஒரு விரிவையும், மார்க்கத்திற்கான ஆர்வத்தையும், மன உறுதியின் அதிகரிப்பையும் உணர்கிறார். அவர்களுக்கு வழங்கப்பட்ட நறுமணத்தின் பயனை ஒவ்வொரு பற்றுள்ளவரும் அவர்களுக்கு பூரணமாக கீழ்ப்படிதலின் மூலம், தன் தகுதிக்கேற்ப பெறுகிறார். ஆனால், நற்பேறு அற்றவர்கள் அதில் எவ்வித பங்கும் பெறுவதில்லை. அவர்கள் தங்கள் பகைமை, பொறாமை, தீய எண்ணங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து அதிகரித்து, இறுதியில் நரகத்தில் வீழ்கிறார்கள்.

இது இந்த வசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

خَتَمَ اللّٰهُ عَلٰى قُلُوْبِهِمْ

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின், தொகுதி 1 பக்கம் 529-532, குறிப்பு 3)

நமது புனித நபி (ஸல்) அவர்களின் வாதம் சூரியனைப் போல வெளிச்சமாய் பிரகாசிக்கிறது. அன்னாருடைய அருள் என்றும் பாய்ந்து கொண்டிருக் -கிறது என்பதே, அன்னாருடைய நித்திய வாழ்வின் மிகப் பெரிய சான்றாகும்.


இன்றைய காலத்திலும், புனித நபி (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிபவர், மரணித்த நிலையிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு, ஓர் ஆன்மீக வாழ்வினைப் பெறுகிறார். அது வெறும் கற்பனையில் அல்ல. மாறாக, அவருடைய நற்குணங்களின் விளைவுகள் வெளிப்படுவதாலும், விண்ணிலிருந்து வரும் உதவி மற்றும் அருட்களாலும், பரிசுத்த ஆவியின் அசாதாரண ஆதரவாலும் நிகழ்கிறது. அவர் மனிதகுலத்திலேயே தனித்துவமுடையவராக ஆகி விடுகிறார். எந்த அளவுக்கெனில் அல்லாஹ் தானே அவரோடு பேசுகிறான். தனிப்பட்ட இரகசியங்களை அவருக்கு வெளிப்படுத்து -கிறான், தனது நுட்பமான உண்மைகளை அவருக்கு தெரிவிக்கிறான், தனது அன்பும் அருளும் கொண்ட அடையாளங்களை அவரிடம் வெளிப்படுத்துகிறான், தனது உதவியை இறக்குகிறான். தனது அருட்களை அவருக்குள் வைக்கிறான். மேலும் அவரைத் தன் ரூபூபிய்யத்தின் கண்ணாடியாக ஆக்குகிறான்.

அவரது நாவிலிருந்து ஞானம் வழிந்தோடுகிறது. அவரது உள்ளத்திலிருந்து நுண்ணிய அறிவின் ஊற்றுகள் வெடித்து பாய்கின்றன. மறைந்திருக்கும் இரகசியங்கள் அவரிடம் வெளிப்படுகின்றன. அல்லாஹ்

அவருக்கு தனது மகத்தான ஒரு தோற்றத்தை அளிக்கிறான். அவருக்கு அருகில் வருகிறான்.

அவரது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதிலும், அறிவின் கதவுகள் திறக்கப்படுவதிலும், மறைமுக இரகசியங்களின் வெளிப்பாட்டிலும், அருட்கள் அவர் மீது இறங்குவதிலும் அவர் அனைவரையும் விட மேன்மை பெற்றவர் ஆகிறார்.

இந்த அடியேன், இறைவனால் நியமிக்கப்பட்ட நிலையில் இவ்விஷயங்கள் தெளிவாக நிறுவப்படு-வதற்காக, ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றில் உள்ள பிரபலமான இஸ்லாத்தின் எதிரிகளுக்கு பல ஆயிரம் பதிவு செய்யப்பட்ட கடிதங்களை அனுப்பினேன். நான் அவர்களை அழைத்தேன். ஒருவர், காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் வேறு வழியில் ஆன்மீக வாழ்க்கையை அடைய முடியும் எனக் கருதுவதாக இருந்தால், எனக்கு எதிராக முன்வரட்டும். இல்லை எனில், உண்மையை நாடுபவராக என்னிடம் வரட்டும் என் மீது இறக்கப்படும் அருட்களையும் அடையாளங்களையும் நேரில் காணட்டும். ஆனால், எவரும் நேர்மையுடனும் நல்ல எண்ணத்துடனும் முன்வரவில்லை. மாறாக தங்களைத் தாங்களே விலக்கிக் கொண்டனர். இதன் மூலம், அவர்கள் அனைவரும் இருளில் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயின், தொகுதி 5, பக்கம் 221,222)



நிச்சயமாக நாம் அறிந்திருக்கிறோம்: அல்லாஹ்வின் மிகப் பெரிய நபியும், அவனுடைய மிக அன்புக்குரியவரும், தேர்ந்தெடுக்கப்பட்டவரும் முஹம்மது (ஸல்) அவர்களே ஆவார்கள். பிற நபிமார்-களைப் பின்பற்றுபவர்கள் இருளில் மூழ்கியுள்ளனர். அவர்கள் கையில் இருப்பது வெறும் பழைய கதைகளும் வரலாறுகளும் மட்டுமே ஆகும். ஆனால், முஸ்லிம்கள் எப்போதும் அல்லாஹ்விடமிருந்து புதிய அடையாளங்-களைப் பெறுகின்றனர்.

அதனால், முஸ்லிம்களில் பல அறிவுடையவர்கள் காணப்படுகிறார்கள். அவர்கள் அல்லாஹ்வை நேரில் கண்டவர்கள் போலவே உறுதியான நம்பிக்கையோடு நம்புகின்றனர். ஆனால், மற்றவர்களைப் பார்த்தால், அல்லாஹ்வைப் பற்றிய இந்த நிச்சயமான நம்பிக்கை அவர்களிடம் இல்லை. எனவே, உண்மையான, நேர்மையான மார்க்கம் இஸ்லாம் மட்டுமே என்று எமது ஆன்மா சாட்சி அளிக்கிறது.

நமது புனித நபி (ஸல்) அவர்களின் அற்புதங்கள் வெறும் கதைகள் அல்ல. அன்னாருக்குக் கீழ்ப்படிவதன் மூலம், அந்த அடையாளங்களை நாமே அனுபவிக்கிறோம். அறிவது மற்றும் அனுபவிப்பதின் அருட்களின் மூலம், முழுமையான நிச்சய உறுதியை அடைகிறோம்.

எவ்வளவு உயர்ந்தது அந்தப் பூரணமான புனித நபியின் நிலை! அன்னாரது நபித்துவம் எப்போதும் தேடுபவர்களுக்கு புதிய சான்றுகளை அளிக்கிறது. இடைவிடாத அடையாளங்களை நேரில் கண்டு அனுபவிப்பதன் அருட்களின் மூலம் நாம், “நாம் அல்லாஹ்வையே நேரில் கண்டோம்” என்று சொல்லும் நிலைக்கு வருகிறோம்.


ஆகவே, உண்மையான மார்க்கம் அதுவே. உண்மையான நபி அவரே. அன்னாருடைய உண்மையின் புதிய ஊற்று எப்போதும் காணப்பட வேண்டும். வெறும் கதைகளின் மீது நம்பிக்கை வைப்பது அவை பல்வேறு விதமான சந்தேகங்களுக்கு உள்ளாகக் கூடியவை என்பதால் அறிவுடையோருக்குப் பொருத்தமாகாது. உலகில் நூற்றுக்கணக்-கானோர் கடவுள்களாக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் பற்றிய நூற்றுக்கணக்கான பழைய கதைகளின் அடிப்படையில் நம்பிக்கை வைக்கப்படுகிறது. ஆனால் உண்மை என்னவென்றால், உண்மையான அற்புதங்களை வெளிப்படுத்துபவருக்கு, அவருடைய அற்புதங்களின் ஆறு ஒருபோதும் உலராது. அந்த நபர் எங்கள் தலைவர், எங்கள் எஜமான், புனித நபி முஹம்மது (ஸல்) அவர்களே ஆவார்கள்.

ஒவ்வொரு காலத்திலும், அல்லாஹ் அந்தப் பூரண புனித நபியின் அடையாளங்களை வெளிப்படுத்த ஒருவரை எழுப்பியுள்ளான். இக்காலத்தில், அவன் என்னை ‘வாக்களிக்கப்பட்ட மஸீஹ்’ என்ற பட்டத்துடன் அனுப்பியுள்ளான். வானத்திலிருந்து அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அற்புதமான நிகழ்வுகள் பலவும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. உண்மையை நாடுபவர் எவராயினும் அவர் கிறிஸ்தவர் ஆகட்டும், யூதர் ஆகட்டும், ஆரியர் ஆகட்டும் என்னிடம் வந்து தங்கி, இந்த அடையாளங்களை நேரில் காணலாம். இவை அனைத்தும் எங்கள் புனித நபி (ஸல்) அவர்களின் அருட்களே! (கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயின், தொகுதி 13 பக்கம் 155-157, அடிக்குறிப்பு)

(தொடரும்)

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர்

மதிப்பிற்குரிய முஹம்மத் இனாம் கோரீ சாஹிப் (நாஸிர் அஃலா காதியான்)
*தமிழாக்கம்: இப்னு வஸீம்*



*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

இப்பொழுது நாம் பார்க்க வேண்டியதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ (அலை) அவர்கள் பதினான்காம் நூற்றாண்டின் முஜத்திதாக, (மார்க்கத்தைப் புதுப்பிப்பவராக), இந்தக் காலத்தின் தஜ்ஜாலிய குழப்பத்தைத் தடுப்பவராக மற்றும் இஸ்லாத்தைப் புதுப்பிப்பதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி எனும் பதவியில் அமர்த்தப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இதன் உண்மைத்துவம் என்ன? மேலும், ஹுஸூர் (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் முன்னுதாரணமான அன்பு நேசம் மற்றும் முழுமையான கட்டுப்படுதல் ஆகியவற்றின் விளைவாக, நான் துவக்கத்தில் ஓதிய சூரா அந்நிஸாவின் வசனத்தின்படி, ஹுஸூர் (அலை) அவர்களுக்கு இறைவன் மீதான அன்பு மற்றும் இறைநெருக்கத்தின் நான்கு படித்தரங்களில் குறிப்பாக, எந்த உயர்ப்படித்தரம் கிடைக்கப்பெற்றது?

திருக்குர்ஆன், சான்றுப்பூர்வமான நபிமொழி, உம்மத்தின் சான்றோர்களின் கூற்றுக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பதவியும், படித்தரமுமாக என்ன கூறப்பட்டுள்ளது என்பது இது குறித்து புரிவதற்கும், மனதில் பதிய வைப்பதற்கும் அவசியமான அடிப்படை விஷயமாகும். அது என்னவென்றால், அந்த காலத்தின் இமாம் அவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து வஹீ மற்றும் இல்ஹாமும், அதிக அளவில் இறைவனுடன் உரையாடப் பெறும் கண்ணியமும் கிடைக்கும். அந்த கண்ணியமே ஷரீஅத்தின் உவமையில் நபித்துவம் என்ற தரத்தால் வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து அருட்கொடைகளும், கண்ணியங்களும் கண்ணியத்திற்குரிய நபி ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களுடன் முன்னுதாரணமான அன்பு மற்றும் முழுமையான கட்டுப்படுதல் ஆகியவற்றின் விளைவாகக் கிடைக்கப் பெற்றது.

இந்த இறைஞானமிக்க கருத்தைப் புரிவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் (இறைவனான) அவன் மீதே ஆணையிட்டுக் கூறுகிறேன். அவன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடன் உரையாடினான். பிறகு, ஹஸ்ரத் இஸ்ஹாக் (அலை) அவர்களுடன், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களுடன், ஹஸ்ரத் ய.ஃகூப் (அலை) அவர்களுடன், ஹஸ்ரத் யூஸு.ஃப் (அலை) அவர்களுடன், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன், ஹஸ்ரத் மஸீஹ் இப்னு மர்யம் (அலை) அவர்களுடன் மற்றும் எல்லாருக்கும் பிறகு நம்முடைய நபி (ஸல்) அவர்களுடன் எப்படி உரையாடி-னான் என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எல்லா-வற்றையும் விட ஒளிமிக்க, தூய வஹீயை இறக்கினான்.

அவ்வாறே அவன் எனக்கும் தன்னுடன் உரையாடலுக்கான கண்ணியத்தை வழங்கினான். ஆனால், எனக்கு இந்த கண்ணியம் நபி பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதனால் கிடைக்கப் பெற்றது. நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவனாக இல்லாமல் இருந்திருந்தால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் இருந்திருந்தால், உலகின் அனைத்து மலைகளுக்கு சமமாக என்னுடைய அமல்கள் இருந்திருந்தாலும் பிறகும் நான் இறைவனுடன் உரையாடும் இந்த கண்ணியத்தை ஒருபோதும் பெற்றிருக்க மாட்டேன்." (தஜல்லிய்யாத்தே இலாஹிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 20, பக்கம் 411-412)

மேலும், கூறுகிறார்கள்: "மேன்மை பொருந்திய அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை காத்தமாக ஆக்கியுள்ளான். அதாவது, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மேன்மையை வெளிப்படுத்துவதற்காக முத்திரையை வழங்கினான். அது வேறு எந்த நபிக்கும் ஒருபோதும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே, ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு காத்தமுன் நபிய்யீன் (நபிமார்களுக்கெல்லாம் முத்திரை) என்ற பெயர் வந்தது. அதாவது, மாநபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் நபித்துவத்தின் சிறப்புகளை வழங்குகிறது. ஹுஸூர் (ஸல்) அவர்களின் ஆன்மிக கவனம் செலுத்துதல் நபியை வடிவமைக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த ஆன்மிக ஆற்றல் வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை." (ஹகீக்கத்துல் வஹீ. ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 100. அடிக்குறிப்பு)

இவ்வாறே இதையும் கூறினார்கள்: நான் மிக மிக உறுதியாகக் கூறுகிறேன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நபித்துவத்தின் சிறப்புகள் நிறைவடைந்து விட்டன. நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக ஏதாவது ஓர் இயக்கத்தை உருவாக்குபவர், நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்திலிருந்து விலகி ஏதேனும் உண்மைத்துவம் (இருப்பதாக அதை) எடுத்து வைப்பவர் மற்றும் நபித்துவத்தின் நீரூற்றை விடுபவர் பொய்யரும் இட்டுக்கட்டுபவரும் ஆவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர அன்னாருக்குப் பிறகு, வேறு ஒருவரை நபியாக நம்புகின்றவர், அன்னாரது கத்மே நுபுவ்வத்தை முறிப்பவர் சபிக்கப்பட்டவர் ஆவார் என்று நான் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறேன். இதன் காரணமாகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு, அதே முஹம்மதிய்ய நபித்துவ முத்திரையைக் கொண்டிராத எந்த நபியும் வர முடியாது.

எதிர்க்கருத்து கொண்டுள்ள நம்முடைய முஸ்லிம்கள் இதே தவறைத்தான் இழைத்திருக்கிறார்கள். அதாவது, அவர்கள் கத்மே நுபுவ்வத் எனும் முத்திரையை முறித்து இஸ்ரவேலிய நபியை விண்ணிலிருந்து இறக்குகிறார்கள். நான் கூறுகிறேன். 1300 ஆண்டுகளுக்குப் பிறகும், பெருமானார் (ஸல்) அவர்கள் அளித்த தர்பிய்யத் மற்றும் த.்.லீம் ஆகியவற்றின் மூலமாகவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அன்னாரது உம்மத்தில் அதே நபித்துவ முத்திரையைக் கொண்டு வருகிறார் என்பது மாநபி (ஸல்) அவர்களின் ஆன்மிக ஆற்றலும், அன்னாரது நிரந்தர நபித்துவத்தின் ஓர் அற்பமான அதிசயமுமாகும்.

இந்தக் கொள்கை கு.்.ப்ர் (நிராகரிப்பு) என்றால், பிறகு நான் அந்த கு.்.ப்ரைப் பிடித்தமானதாகக் கொள்கிறேன். ஆனால், எவர்களின் சிந்தைகள் இருளடைந்து விட்டனவோ, எவர்களுக்கு நபித்துவத்தின் ஒளியில் இருந்து பங்கு வழங்கப்படவில்லையோ அவர்களால் அதைப் புரிய முடியாது. மேலும், அதை கு.்.ப்ர் என்று கூறி விடுகிறார்கள். ஆனால், இது எத்தகைய விஷயம் என்றால், இதன் மூலம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேன்மை மற்றும் அன்னாரது வாழ்விற்கான சான்று கிடைக்கிறது. (அல் ஹகம் பத்திரிகை. 10 ஜூன் 1905, பக்கம் 2, பத்தி 2)


மேலும், பிறிதோரிடத்தில் கூறுகிறார்கள்: இவ்வாறே எல்லாம் வல்ல இறைவன் புறமிருந்து நான் இரு பெயர்களைப் பெற்றேன். எனக்கு உம்மத்தீ என்ற ஒரு பெயர் வைக்கப்பட்டுள்ளது. அது எனது பெயரான குலாமே அஹ்மத் என்பதன் மூலம் வெளிப்படுகிறது. இரண்டாவது, எனது பெயர் நிழல் வடிவில் நபி என்று வைக்கப்பட்டுள்ளது. இறைவன் பராஹீனே அஹ்மதிய்யாவின் முந்தைய பாகங்களில் எனது பெயரை அஹ்மத் என்று வைத்துள்ளான். அந்தப் பெயரை வைத்தே மீண்டும் மீண்டும் என்னை அழைத்தான். இது நான் நிழல்வடிவில் நபியாக இருக்கிறேன் என்பதையே சுட்டிக் காட்டியது. எனவே, நான் உம்மத்தீயாகவும் இருக்கிறேன். நிழல்வடிவில் நபியாகவும் இருக்கிறேன். பராஹீனே அஹ்மதிய்யாவின் முந்தைய பாகங்களில் உள்ள பின்வரும் வஹீயும் இதைத்தான் சுட்டிக் காட்டுகிறது:

كُلُّ بَرَكَةٍ مِنْ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَتَبَارَكَ مَنْ عَلَّمَ وَتَعَلَّمَ

பொருள்: ஒவ்வோர் அருளும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் புறமிருந்து உள்ளது. எனவே, கல்வி கற்றுத்தந்த அவர் மிகவும் அருளுக்குரியவர் ஆவார்கள். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அவர்களுக்குப் பிறகு, கல்வி பயின்றவர் மிகவும் அருளுக்குரியவர் ஆவார். அதாவது, இந்த எளியவன்.

எனவே, முழுமையாக பின்பற்றுதல் காரணமாக எனது பெயர் உம்மத்தீ என்றாயிற்று. மேலும், நபித்துவத்தின் முழு பிம்பத்தையும் பெற்றதனால் எனது பெயர் நபி என்றாயிற்று. ஆக, இவ்வாறு எனக்கு இரு பெயர்கள் கிடைக்கப்பெற்றன. (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5 இன் பின் இணைப்பு. ரூஹானீ கஸாயின் தொகுதி 21, பக்கம் 360)

எவற்றின்படி அமல் செய்வதாக உறுதி எடுத்துக் கொண்டு ஒரு நபர் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் நுழைகிறாரோ அந்த பைஅத் நிபந்தனைகளில் இந்தவொரு நிபந்தனையும் வைக்கப்பட்டுள்ளது: “இறைவனின் கட்டளையின் படியும், அவனுடைய தூதரின் கட்டளையின் படியும் ஐவேளைத் தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். இயன்ற வரை தஹஜ்ஜுத் தொழுகையைத் தொழுதல், எம் நபி (ஸல்) அவர்கள் மீது சலவாத் ஓதுதல், நாள்தோறும் என்னுடைய பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டல், இஸ்தி.்.க்.்.பார் செய்தல் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வருவேன். இறைவனின் பேரருள்களை மனமார நினைவுகூர்ந்து அவனைப் புகழ்ந்து அவனது தூய்மையை எடுத்துரைப்பதை எனது அன்றாட வழக்கமாக ஆக்கிக் கொள்வேன்.” (12 ஜூலை 1889 அன்று வெளியிடப்பட்ட பிரசுரம்)




ஒரு நபர் பைஅத் செய்த பிறகு, ‘ஹுஸூர் எனக்கு மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய நன்மையை ஒன்றைக் கூறுங்கள்’ என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறினார்கள்: தொழுகைகளை நிறுத்தி நிதானமாகத் தொழுதிடுங்கள். ஏனெனில், அனைத்து சிரமங்களுக்கும் இதுவே திறவுகோல் ஆகும். இதில் அனைத்து இன்பங்களும், கருவூலங்களும் நிறைந்துள்ளன. உண்மையான உள்ளத்துடன் நோன்பு வையுங்கள். தான தர்மங்கள் செய்திடுங்கள். துரூத் மற்றும் இஸ்தி.்.க்.்.பார் ஓதி வாருங்கள்.” (அல்ஹகம் பத்திரிகை. தொகுதி 7, இதழ் 28 பிப்ரவரி 1903)

ஹஸ்ரத் மவ்லவி குலாம் ஹுஸைன் சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: “ஒருமுறை நான் ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், என் தந்தையார் சிஷ்தீ வழிமுறையைச் சேர்ந்தவர் ஆவார். எனவே, அஹ்மதிய்யத்துக்கு முன்பு நானும் இந்த வழிமுறையில் மீண்டும் மீண்டும் ஓதும் திக்ருகள் பக்கம் சாய்ந்திருந்தேன். இப்பொழுதும் ஓரளவுக்கு சாய்ந்திருக்கிறேன் என்றே சொல்ல வேண்டும். எனவே, ஹுஸூர் அவர்களே! நான் மீண்டும் மீண்டும் ஓதக்கூடிய ஏதேனும் ஒன்றை எனக்குக் கூறிடுங்கள்” என்று பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: "நம் ஜமாஅத்தில் மீண்டும் மீண்டும் ஓதக்கூடிய இத்தகைய எந்த விஷயமும் இல்லை. ஆயினும், அதிகமாக இஸ்தி.'.க்.'.பார் செய்து வாருங்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேருதவிகளை அதிகம் நினைவுகூர்ந்து நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அதிகதிகமாக துரூத் ஓதி வாருங்கள். ஆக, இதுவே மீண்டும் மீண்டும் ஓதக்கூடியதாகும்."(சான்று: மர்ஹூம் மௌலானா முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் தொகுத்த மஹாமித் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) என்ற நூல்)

இறைவனுக்குப் பிடித்தமானவர்களாக ஆவதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கொண்டிருந்த ஈமானும் உறுதியான நம்பிக்கையும் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை விட்டு விட்டு, இறை நெருக்கத்தைத் தேடுவதற்காக தம் ரீதியாக புதுப்புது வழிகளைக் கண்டுபிடித்துக் கொள்ளக்கூடாது. இது தொடர்பாக ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:




"கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்களையும், செயல்முறையையும் தனக்கு வழிகாட்டிகளாக, தன்னை வழிநடத்துபவையாக ஆக்கிக் கொள்ளாத வரை ஒரு மனிதனால் அல்லாஹ்வின் மீதான நேசத்தை முழுமையான முறையில் தன்னுள் உருவாக்கிக் கொள்ள முடியாது. இறைவனுக்குப் பிடித்தமானவராக ஆவதற்கு மாநபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது அவசியமாகும். பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் சாயலைத் தமக்குள் உருவாக்குவது தான் உண்மையான பின்பற்றுதல் ஆகும். ஆனால், அந்தோ பரிதாபம்! இன்றைய நாள்களில் மக்கள் பின்பற்றுதல் என்பதற்கு வெறும், கைகளைக் காதுகள் வரை உயர்த்துதல், உரக்க ஆமீன் கூறுதல் மற்றும் கலிமா விரலை உயர்த்துதல் ஆகியவற்றையே பொருள் கொண்டிருக்கிறார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்களாக இருந்த பிற விஷயங்களை விட்டு விட்டார்கள்...." (அல் ஹகம் பத்திரிகை. தொகுதி 6. எண் 27. பக்கம் 5-8. தேதி 31 ஜூலை 1902)

மேலும், கூறுகிறார்கள்: செயல்களின் முடிவுகளைப் பற்றி சிந்திக்கவில்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் இருந்து கிடைத்த அந்த நல்ல அமல்களை விட்டு விட்டார்கள். அவற்றிற்குப் பதிலாக தாமாகவே உருவாக்கிக் கொண்ட விர்துகள் செய்தல் மற்றும் மீண்டும் மீண்டும் ஓதும் விஷயங்கள் ஆகியவற்றை உருவாக்கிக் கொண்டார்கள். மேலும், சில கா.'.பியாக்களை (ஈற்றெழுத்துகள் அல்லது ஈற்றயல் எழுத்துகள் ஒன்றி வரும் உருதுச் செய்யுள் வகைகளை) மனனம் செய்து கொள்வது போதுமானதாகக் கருதப்பட்டது. புல்ஹே ஷாஹ் என்பவரின் (இவ்வகை) செய்கைளைக் கேட்டு பரவசமடைந்து விடுகிறார்கள்....

சிலர் இந்த ஆடல் பாடல் சபைகளில் வேண்டுமென்றே தலைப்பாகைகளைக் கழட்டிக் கொள்கிறார்கள். மியான் அவர்கள் அவையில் அமர்ந்ததுமே பரவச நிலை ஏற்பட்டு விடுகிறது என்று கூறுகிறார்கள். இது போன்ற பித்அத்துகள் மற்றும் புதுவகை பிரச்சனைகள் உருவாகி விடுகின்றன..... பெரும் பெரும் தலைவர்களாக, அரியணையில் அமர்ந்திருப்பவர்களாக, எஜமானர்களாக இருக்கின்ற அந்த எதிரிகளிடம் நான் கேட்கிறேன், உங்களுடைய விர்துகள், மீண்டும் மீண்டும் ஓதுதல், சில்லா இருத்தல் மற்றும் தலை -கீழாகத் தொங்குதல் ஆகிய இவையே இறைஞானத்தைப் பெறுவதற்கும் உண்மையைக் கண்டறிவதற்கும் உண்மை -யான வழிகளாக இருந்தன என்றால், இறைத்தூதர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவற்றை மறந்து விட்டார்களா?.....

ஒரு பக்கமோ இந்த அநீதியிழைக்கும் இயல்புடைய மக்கள், நான் ஷரீஅத்தை உடைய நபி பெருமானார் (ஸல்) அவர்களை விட்டு விலகி தனியான நபித்துவமாக இருக்கின்ற (பின்பற்றாமல் கிடைக்கும்) நேரடி நபித்துவத்திற்கான வாதம் புரிகிறேன் என்று என் மீது இட்டுக்கட்டுகிறார்கள். ஆனால், மறுபக்கம் இவர்கள் தங்களுடைய செயல்கள் பக்கம் சிறிதும் கவனம் செலுத்துவதில்லை. தூதர் (ஸல்) அவர்களுக்கு எதிராக, திருக்குர்ஆனுக்கு எதிராக ஒரு புதிய ஷரீஅத்தை உருவாக்கி பொய்யான நபித்துவத்திற்கான வாதத்தையோ இவர்கள்தான் புரிகிறார்கள். இப்பொழுது எவருடைய உள்ளத்திலாவது நீதி மற்றும் இறைவன் மீதான அச்சம் இருக்கிறது என்றால், நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய போதனைகள் மற்றும் அமல் ஆகியவற்றில் ஏதும் கூட்டவோ, குறைக்கவோ செய்கிறோமா என்று யாராவது எனக்குக் கூறுங்களேன்!

இதே திருக்குர்ஆனுக்கு ஏற்பவே நாம் போதனை வழங்குகிறோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையே நம்முடைய இமாமாகவும், இறுதித் தீர்ப்பளிப்பவராகவும் ஏற்றுக் கொள்கிறோம்.

இப்பொழுது நான் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.'.பா (ஸல்) அவர்களின் ஆன்மிக ஆற்றல், பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மிக வாழ்வு மற்றும் இந்த உண்மைப் பேரன்பர், உண்மைத் தொண்டர் அவர்களின் உயர்ப்பதவி மற்றும் உயர்ப்படித்தரம் ஆகியவற்றின் சுருக்கம் என்ற வடிவில் இருக்கின்ற, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இரு கவிதைகளை எடுத்து வைக்கிறேன்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

إِنِّي لَقَدْ أُحْيِيتُ مِنْ إِحْيَائِهِ وَاهًا لِإِعْجَازٍ فَمَا أَحْيَانِي

பொருள்: ஐயமின்றி, நான் பெருமானார் (ஸல்) அவர்கள் உயிர்ப்பித்ததன் காரணமாகவே உயிர்த் -தெழுந்தேன். ஸுப்ஹானல்லாஹ்! என்னே அற்புதம்! என்னை எவ்வளவு அருமையாக உயிர்த்தெழச் செய்துள்ளார்கள்.

அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயரிய மற்றும் மேலான படித்தரம், உயர்த்தகுதி மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் நிரந்தரமான ஆன்மிக வாழ்வு ஆகியவற்றிற்கு நான் எடுத்து வைக்கும் சான்றுகள் மற்றும் எந்த உண்மை, இஸ்லாத்தின் உண்மைத்துவம் மற்றும் அழகிய கனிகள் ஆகியவற்றைக் கொண்டு நான் உலகிற்கு ஒளியூட்டுகின்றேனோ, திருக்குர்ஆனின் எந்த உண்மைத் -துவங்கள் மற்றும் இறைஞானங்கள் ஆகியவற்றை உலகுக்கு முன்னால் எடுத்து வைத்து அந்த இறுதி ஷரீஅத்தை முழுமையான, நிறைவான மற்றும் நிரந்தரமான ஈடேற்றத்திற்கான வழியாகக் கூறுகிறேனோ, இந்த அனைத்து சிறப்புகள், உண்மையில், அதே உயிருள்ள நபி (ஸல்) அவர்கள் கைமேல் வைத்துள்ள பரக்கத்துகள் ஆகும். ஆக, (ஒரு ஃபார்ஸீ கவிதையில்) கூறுகிறார்கள்:

این چشمہ رواں کہ بخلق خدا دهم یک قطره از بحر کمال محمد ؐ است

பொருள்: இறைவனின் படைப்பினங்களுக்கு நான் வழங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பாய்ந்தோடும் இறைஞானத்தின் நீரூற்று, ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறப்புகள் எனும் கடலிலிருந்து ஒரு துளியே ஆகும்.

ஹுஸூர் (அலை) அவர்களின் ஓர் அரபுக் கவிதையைக் கூறி எனது உரையை நிறைவு செய்து விடைபெறுகிறேன். அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

إِنِّي أَمُوتُ وَلَا تَمُوتُ مَحَبَّتِي يُدْرَى بِذِكْرِكَ فِي التُّرَابِ نِدَائِي

பொருள்: நானோ மரணித்து விடுவேன். ஆனால், எனது நேசம் மரணிக்காது. (எனது கப்ரின்) மண்ணிலும் உம்மைப் பற்றிய குறிப்புடனேயே எனது குரல் அறியப்படும்.

يَا رَبِّ صَلِّ عَلَى نَبِيِّكَ دَائِمًا فِي هَذِهِ الدُّنْيَا وَبَعْثٍ ثَانِ

(என் இறைவா! இம்மையிலும் மறுமையிலும் உன் நபியின் மீது நிரந்தரமாக கருணை புரிந்து கொண்டே செல்வாயாக)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்குணங்கள்

எப்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதோவொரு தொடர் மற்றும் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது போன்று தோன்றும். மேலும் ஏதாவதொரு சிந்தனையில் இருப்பதால் நிம்மதியற்று இருப்பது போன்று தோன்றும். அன்னார் பெரும்பாலும் அமைதியாக இருப்பார்கள். தேவையில்லாமல் பேசமாட்டார்கள். பேசும் போது மிகத் தெளிவாக பேசுவார்கள். அன்னாரது பேச்சு சுருக்கமாகவும் ஆனால் தெளிவாகவும், ஞானம் நிறைந்ததாகவும் இருந்தது. மேலும் வீண் விஷயங்களில் இருந்து தவிர்ந்ததாகவும் இருந்தது. அன்னார் யாரையும் பழிந்துரைத்ததும் இல்லை. ஏளனம் செய்ததுமில்லை. சின்னஞ்சிறு அருள்களைக் கூட பெரிதாக வெளிப்படுத்துவார்கள். அன்னாரிடம் நன்றியுணர்வு மிகைத்திருந்தது. எந்த பொருளையும் பழிந்துரைப்பதில்லை. மேலும் எந்தப் பொருளையும் தனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்பது போன்று புகழ்வதில்லை. உணவு மற்றும் அருந்தும் விஷயத்தில் சுவை மற்றும் சுவையின்மையின் சமயத்தில் உலகமே வெடிக்கும் அளவிற்கு கோபப்படுவது அன்னாரது வழக்கமல்ல. எப்போதும் நடுநிலையை கைக்கொள்வார்கள். உலக விஷயங்களுக்காக கோபமடைய மாட்டார்கள். தவறாக கருதவும் மாட்டார்கள். ஆனால் உண்மையை அவமதித்தால் அல்லது மறுத்தால் பிறகு அன்னாரது கோபத்திற்கு முன்பு யாராலும் நிற்க முடியாது. மேலும் இழப்பீடு கிடைக்கும் வரை நிம்மதியற்று இருப்பார்கள். தனக்காக ஒருபோதும் சினம் கொண்டதில்லை. பழிவாங்கியதுமில்லை. சைகை காட்டும் போது முழு கையினால் காட்டுவார்கள். விரல்களை மட்டும் அசைக்க மாட்டார்கள். மேலும் அன்னார் ஆச்சரியப்படும் போது கைகளை திருப்பிக் கொள்வார்கள். ஏதாவதொரு விஷயத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றால் ஒரு கையை மற்றொரு கையின் மீது அதாவது வலது உள்ளங்கையில் இடது கை பெருவிரலை அடிப்பார்கள். ஏதாவது விருப்பமில்லாத விஷயத்தை பார்த்தால் முகம் திருப்பிக் கொள்வார்கள். மேலும் மகிழ்ச்சியின் சமயத்தில் ஓரளவு கண்களை மூடிக் கொள்வார்கள். அன்னாரின் அதிகபட்ச சிரிப்பு புன்முறுவல் அளவுக்கே இருக்கும். சத்தமாக சிரிக்க மாட்டார்கள். அன்னார் சிரிக்கும் போது மேகத்திலிருந்து வெண்ணிற ஆலங்கட்டி விழுவது போன்று அன்னாரது பற்கள் தென்படும்.

(ஷமாயில் திர்மிதி பாடம் கைஃப கான கலாமி ரஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்)

# அருளுக்குரிய கிலாஃபத்தின் கீழ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றங்கள்




**மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மத் ஹயாத் சாஹிப்**
(Ameer, Jama'at Ahmadiyya, UK)

**தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

1965 இல், ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் (ரஹி) மூன்றாவது கலீ∴பாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பணிவு, ஆன்மீக ஆழம் மற்றும் புலமை கொண்ட ஒரு மனிதர் ஆவார்கள். அவர்களது உறுதியான நிலைப்பாட்டில் உள்ள ஜமாஅத்தை மரபுரிமையாகப் பெற்றார்கள். ஆனால் விரைவில் அவர்கள் ஜமாஅத்திற்கு எதிராக பொங்கி வரும் எதிர்ப்பு அலையை சந்தித்தார்கள்.

சுல்∴பிகார் அலி பூட்டோவின் அரசாங்கத்தின் கீழ், தீவிர மதகுருக்களின் அரசியல் அழுத்தம் அதிகரித்தது. 1974 ஆம் ஆண்டில், பாகிஸ்தானின் தேசிய சட்டமன்றம் அஹ்மதியர்களின் நிலை குறித்த விவாதத்தை நடத்தியது. மேலும் ஒருதலைப்பட்சமான மற்றும் அநீதியான செயல்முறைக்குப் பிறகு, ஜமாஅத்தை முஸ்லிம் அல்ல என்று அறிவித்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த நேரத்தில், கண்ணியத்துடனும் ஆன்மிகத் தெளிவுடனும் எதிர்த்து நின்றார்கள். அவர்கள் நாட்டு மக்களுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்கள்:

இன்று எங்களை முஸ்லிம் அல்லாதவர்கள் என்று அறிவித்தால், நாளை உங்கள் பார்வையில் எவரும் முஸ்லிமாக இருக்க மாட்டார்கள்.



அவர்களுடைய வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக நிரூபிக்கப்பட்டது. அவர்கள் முன்னறிவித்ததைப் போலவே, அடுத்த ஆண்டுகளில் மார்க்கப் பிரிவு -களிடையே மோதல்கள் ஏற்பட்டன.

ஆயினும் கூட, ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தளரவில்லை. ஆப்பிரிக்கா முழுவதும் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளைக் கட்டி நுஸ்ரத் ஜஹான் திட்டம் போன்ற முன்முயற்சிகளை அவர்கள் தொடங்கினார்கள் - இந்த திட்டம் இன்று வரை வாழ்க்கையை மாற்றுகிறது. அவர்கள் ஸ்பெயினில் பஷாரத் மஸ்ஜிதிற்கு அடிக்கல் நாட்டினார்கள். கடந்த 700 ஆண்டுகளில் அந்த நாட்டில் கட்டப்பட்ட முதல் பள்ளியாகும், ஒரு காலத்தில் புகழ்பெற்ற இஸ்லாமிய நாகரிகத்திற்கு இஸ்லாம் மீண்டும் அமைதியாக திரும்புவதைக் குறிக்கிறது.

அவர்களுடைய கிலாபத்தின் கீழ் தான் ஜமாஅத் இப்போது உலகப் புகழ்பெற்ற முழக்கத்தை ஏற்றுக் கொண்டது: "எல்லாரிடமும் அன்பு; எவரிடமும் இல்லை வெறுப்பு என்பதாகும்."

இவை வெற்று வார்த்தைகள் அல்ல. இது அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் வாழும் நெறிமுறையாக இருந்தது. இன்று நீங்கள் உலகில் எங்கு சென்றாலும், இந்த செய்தி பின்வருமாறு. அது கதவுகளைத் திறக்கிறது. இதயங்களை மென்மையாக்குகிறது. பிரிவினையின் யுகத்தில் தார்மீக கலங்கரை விளக்கமாக நிற்கிறது.

1982 ஆம் ஆண்டில், ஹஸ்ரத் மூன்றாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். ஜமாஅத் துக்கம் அனுசரித்தது. ஆனால் ஜமாஅத் கிலா∴பத்தின் பணியை நிறுத்த முடியாது மற்றும் அது தொடர்ந்து செல்லும் என்பதை அறிந்திருந்தது.

1982 இல், ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் (ரஹி) அவர்கள் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது. ஹுஸூர் (ரஹி) தேர்தலுக் -குப் பிறகு, முன்னாள் ஜனாதிபதி ஜியா-உல்-ஹக்கின் ஆட்சி, பாகிஸ்தானுக்குள் கிலா∴பத்தின் குரலை சட்டப்பூர்வமாக முடக்கிய அடக்குமுறை கட்டளை XX-ஐ இயற்றியது.

இந்த அச்சுறுத்தல்களுக்கு விடை அளிக்கும் வகையில், ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) இலண்டனுக்கு இடம்பெயர்வதற்கான முக்கியமான முடிவை எடுத்தார்கள். 60 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் கலீ∴பாவால் அமைக்கப்பட்ட ∴பஸ்ல் மஸ்ஜிதை ஜமாத்தின் சர்வதேச தலைமையகமாக மாற்றினார்கள்.

இங்கு பயந்து பின்வாங்கவில்லை. அது இறைவிருப்பத் -தின் பேரில் ஏற்பட்ட இடமாற்றம். நவீன உலகின் மையமான இலண்டனில் இருந்து, கலீ∴பா இப்போது உலகத்துடன் பேசுவார்கள். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு புதிய பரந்த விரிவாக்கத்தில் நுழைந்தது.

அவர்கள் வந்தபோது, UK ஜமாஅத் சிறியதாக இருந்தது, ஆனால் முழு பற்றோடு இருந்தது. அவர்களது வருகைக்குப் பிறகு முதல் ஜல்ஸா மஹ்மூத் ஹாலில் நடந்தது. இறுதி நாள் சுர்பிடன் பொழுதுபோக்கு மையத்தில் நடைபெற்றது. அங்கு ஹுஃஸுர் ஜல்ஸா அவையில் உரையாற்றினார்கள். அதில் யு.கே ஜமாஅத்தின் மொத்த எண்ணிக்கையும் அதாவது 1,500 ஆண்கள் மற்றும் 1,500 பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்த பணிவான தொடக்கத்தின் சக்தி வாய்ந்த உணர்வு அதன் மூலம் உலகளாவிய பணி மீண்டும் தொடங்கியது.

ஹஸ்ரத் நான்காவது கலீ..பத்துல் மஸீஹ் (ரஹி) உடனடியாக UK ஜமாஅத்தின் திறனை அங்கீகரித்தார்கள். அவர்கள் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தினார்கள். அவர்களில் இஸ்லாம் மற்றும் கிலா..பத்திற்காக பணியாற்ற தேவையான ஒழுக்கம், அறிவு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை உருவாக்கினார்கள். இங்கிலாந்தில் ஜமாஅத் வேகமாக வளர்ச்சியடையும் என்பதை முன்னறிவித்த அவர்கள், ஜமாஅத்தின் எதிர்காலத் தேவைகளுக்காக நிலத்தை வாங்குமாறு அறிவுறுத்தி -னார்கள்.

செப்டம்பர் 1984 இல், Tilford-ல் உள்ள Sheepatch பள்ளி வாங்கப்பட்டு 'இஸ்லாமாபாத்' என்று பெயரிடப்பட்டது. இந்த முடிவு மிஷனரி உஸ்மான் சௌ சாஹிப் அவர்கள் கண்ட கனவின் அடிப்படையில் எடுக்கப்பட்டது.

இலண்டன் மஸ்ஜித் கலீ..பாவின் குடியிருப்பு மற்றும் அலுவலகத்தை உள்ளடக்கிய உலகளாவிய ஆன்மீக மையமாக தொடர்ந்து பணியாற்றினாலும், இது புதிய நடவடிக்கைகளின் மையமாக மாறியது. இந்த அடித்தளத்திலிருந்து- மிகக் குறைந்த வளங்களுடன் ஆனால் வரம்பற்ற உறுதியுடன் ஜமாஅத்தின் சர்வதேசப் பணிகள் மறுசீரமைக்கப்பட்டு மீண்டும் தொடங்கப்பட்டது.

இந்த புதிய தளத்தில் நடத்தப்பட்ட ஆரம்பகால ஜல்ஸாக்கள் எண்ணிக்கையில் மிகச்சிறியவை - 1985 இல் சுமார் 4,000 பங்கேற்றார்கள். ஆனால் கிலா..பத்தின் மாற்றும் சக்தி என்னவென்றால், இந்த 25 ஏக்கர் இடம் சிறியதாக ஆகியது. மேலும் நிலம் வாங்கப்பட வேண்டியிருந்தது, மேலும், ஜமாஅத் ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்ளும் நபர்களின் பெருகி வரும் எண்ணிக்கைக்கு இடமளிக்கும் வகையில் பத்து மடங்கு நிலத்தை வாங்க வேண்டியிருந்தது.

இந்த அருளுக்குரிய காலகட்டத்தில், ஜமாஅத்தின் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆனால் உண்மையான கவனம் வேலையில் இருந்தது. இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் மொழிபெயர்ப்பு, வெளியீடு மற்றும் பிரச்சாரம் ஆகியவற்றில் பெரும் முயற்சிகள் தொடங்கின. ஹஸ்ரத் நான்காவது கலீ..பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களே புனித குர்ஆனை மொழிபெயர்த்தார்கள். “Revelation Rationality Knowledge and Truth” போன்ற அறிவார்ந்த படைப்புகளை எழுதினார்கள். மேலும் பல்வேறு மக்களை சென்றடையும் உதவி மற்றும் மனிதாபிமான திட்டங்களைத் தொடங்கினார்கள்.

இவற்றில் மிக முக்கியமான ஒன்று Humanity First தொடங்கப்பட்டதாகும்.




உணவுப் பொட்டலங்களுடன் போஸ்னியாவுக்கு தன்னார்வலர்களை அனுப்புவது முதல், மனிதகுலத்திற்கு சேவை என்ற இஸ்லாமியக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பள்ளிகள், மருத்துவமனைகள், பேரிடர் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் சுத்தமான நீர் போன்ற திட்டங்களை நடத்தும் Humanity First 60 நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

மற்றொரு வரலாற்று சிறப்புமிக்க திட்டம் வக்..பே நவ் திட்டமாகும். இது ஒரு ஆன்மிகப் புரட்சி, இதில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பிறக்கும் முன்னரே இஸ்லாத்தின் சேவைக்காக அர்ப்பணிக்கிறார்கள். இன்று, நூற்றுக்கணக் -கான, ஆயிரக்கணக்கான வாக்கி..பீன்கள் உலகம் முழுவதும் அமைதி, கல்வி மற்றும் தார்மீக சீர்திருத்தத்தின் பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

ஆனால் அவர்களது கிலா..பத்தின் மிக அற்புதமான சாதனை முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா - MTA தொடங்கப்பட்டதாகும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீ..பத்துல் மஸீஹ் (ரஹி) ஒரு வானொலி நிலையத்தை எதிர்பார்த்திருந்தபோது, அல்லாஹ் பெரிய திட்டங்களை வைத்திருந்தான். இது உலகளாவிய 24 மணி நேர Satellite TV Channel MTA மெதுவாகத் தொடங்கியது. முதலில் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே தன்னார்வலர்களால் நடத்தப்பட்டது. ஆனால் ஏப்ரல் 1996-ல், இது உலகம் முழுவதும் 24x7 ஒளிபரப்பப்பட்டது, இஸ்லாமிய வெளிப்பாட்டின் முகத்தை என்றென்றும் மாற்றியது.

இது இலட்சக்கணக்கான அஹ்மதியர்களுக்கு உயிர் நாடியாக மாறியது. குறிப்பாக துன்புறுத்தலுக்கு உள்ளானவர் -களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை கண்ணியம், பகுத்தறிவு மற்றும் அன்புடன் முன்வைப்பதற்கான ஒரு தளமாக மாறியது.

இந்த காலகட்டத்தில், ஹஸ்ரத் நான்காவது கலீ..பத்துல் மஸீஹ் (ரஹி) ஹோமியோபதி, மொழிகளைக் கற்பித்தல் மற்றும் பலருக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சை அளித்தல், வழக்கமான உதவி இல்லாத இடங்களில் ஆறுதல் மற்றும் குணப்படுத்துதல் ஆகியவற்றில் ஆர்வத்தை மீட்டெடுத்தார்கள். அவர்கள் குழந்தைகளுக்கான வகுப்பு -களை நடத்தினார்கள், இளைஞர்களுடன் உரையாடினார்கள், மேலும் ஜமாஅத்தை ஆன்மீக ரீதியாகவும் அறிவார்ந்த ரீதியாகவும் மேம்படுத்துவதற்கான ஒவ்வொரு கருவியையும் பயன்படுத்தினார்கள்.

பின்னர், அல்லாஹ்வின் ஆணையின்படி, ஏப்ரல் 2003 இல், நான்காவது கலீ∴பா தம் இறைவனிடம் திரும்பினார்கள். ஜமாஅத் ஆழ்ந்த துயரத்தில் இருந்த தருணம் அது. ஆனால் துக்கம் விரைவில் நம்பிக்கை மற்றும் உறுதியாக மாறியது. ஏனெனில் கிலா∴பத் அமைப்பு நிலைபெற்றது.

ஏப்ரல் 22, 2003 அன்று, ஐந்தாவது கலீ∴பா, ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்), இறைவனின் விருப்பதிற்கேற்ப அருளுக்குரிய தேர்தல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

அவர்களது பெயர் அறிவிக்கப்பட்டதும், அந்த சூழ்நிலை உடனடியாக மாறியது. சோகக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறியது. இதயங்கள் மீண்டும் அமைதி கண்டன. ஜமாஅத்திற்கு அவர்கள் கூறிய முதல் வார்த்தைகள்:

“இந்த நேரத்தில் ஜமாஅத்திடம் எனக்கு ஒரே ஒரு வேண்டுகோள் உள்ளது, தயவுசெய்து துஆவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள்; துஆ செய்யுங்கள்; துஆ செய்யுங்கள்; தயவுசெய்து துஆ செய்யுங்கள்.”

இது ஒரு தெளிவான சமிக்ஞையாக இருந்தது: முன்னோக்கிச் செல்லும் பயணம் எளிதானது அல்ல. ஆனால் பிரார்த்தனை, நம்பிக்கை மற்றும் கிலா∴பத் ஆகியவற்றால், எப்போதும் போல நாம் வெற்றி பெறுவோம்.

மிகவும் குழப்பம் நிறைந்த நேரத்தில் அவர்கள் இந்த புனிதப் பதவியை ஏற்றார்கள். உலகம் வேகமாக மாறிக் கொண்டிருந்தது. சில மாதங்களுக்கு முன்பு, ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டது. முஸ்லிம் உலகம் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது, தீவிரவாத சித்தாந்தங்கள் இஸ்லாத்தின் பெயருக்கு களங்கம் கற்பித்தன.

ஆனால் அன்னாரது கிலா∴பத்தின் கீழ், “எல்லாரிடத்திலும் அன்பு, எவரிடத்திலும் இல்லை வெறுப்பு” என்ற செய்தி வெறும் வார்த்தைகளில் மட்டுமல்ல. செயலி-லும் உலகின் ஒவ்வொரு மூலையையும் சென்றடைந்தது.

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் இறுதி மற்றும் தொலைநோக்கு திட்டங்களில் ஒன்று மேற்கு ஐரோப்பாவில் மிகப்பெரிய பள்ளியைக் கட்டுவதற்கான இடத்தைக் கண்டுபிடிப்பதாகும். மேற்குலகின் இதயத்தில் உயர்ந்து நிற்கும் இஸ்லாத்தின் அமைதியான செய்தியின் சின்னம். ஐந்தாம் கிலா∴பத்தின் ஆரம்ப நாட்களில் முடிக்கப்படவிருந்த பைத்துல் ∴புதூஹ் பள்ளிவாசலுக்கு அவர்களே அடிக்கல் நாட்டினார்கள்.

உண்மையில், ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் முதல் பணிகளில் ஒன்று பைத்துல் ∴புதூஹ் பள்ளிவாயிலை திறந்து வைப்பதாகும். இதன் அற்புத அமைப்பு உலகெங்கிலும் உள்ள ஊடகங்கள் மற்றும் அரசாங்கங்களின் கவனத்தை உடனடியாக ஈர்த்தது. தொலைக்காட்சி குழுவினர், நிரூபர்கள் மற்றும் சர்வதேச தலைவர்கள் இந்த அற்புதமான பள்ளி மற்றும் மேலும் முக்கியமாக, அதன் பின்னணியில் உள்ள ஜமாஅத்தைப் பற்றி மேலும் அறிய வந்தனர்.

இந்த பள்ளிவாயில் ஜமாத்தின் அமைதியான பணியின் அடையாளமாக மாறியது மற்றும் அஹ்மதியத்தின் உலகளாவிய அங்கீகாரத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்தது. உண்மையான இஸ்லாத்தின் செய்தி - அமைதி, மனித குலத்திற்கான சேவை மற்றும் ஒருவரின் தேசத்திற்கு முழுமையான விசுவாசம் - முன்னெப்போதையும் விட பரவலாக பரவத் தொடங்கியது.

இந்த பள்ளி திறப்புடன், ஐந்தாவது கிலா∴பத் புதிய மற்றும் தீவிரமான உலகளாவிய சவால்களை எதிர்கொண்டு ஆர்வத்துடன் தனது பயணத்தைத் தொடங்கியது. உலகம் இப்போது ஒப்பீட்டளவில் அமைதியின் சகாப்தத்திலிருந்து பரவலான மோதல், அவநம்பிக்கை மற்றும் பயம் ஆகியவற்றிற்கு வேகமாக நகர்கிறது. ஆறுதல் மற்றும் வழிகாட்டுதல் ஆகிய இரண்டையும் வழங்குவது கலீ∴பாவின் கடமையாக இருந்தது - இதைத்தான் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அசைக்க முடியாத வலிமையுடனும் ஞானத்துடனும் செய்துள்ளார்கள்.

முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யாவை (MTA) உண்மையான உலகளாவிய அமைப்பாக விரிவுபடுத்து-வதற்கான உடனடி நடவடிக்கைகளை அவர்கள் எடுத்தார்கள். இலண்டனில் இருந்து தொடக்கத்தில் ஒரே சேனலாக இருந்தது, இப்போது பல 24/7 சேனல்களைக் கொண்ட குடும்பமாக மாறியது, அரபு, உருது, ஆங்கிலம், பிரஞ்சு, சுவாஹிலி மற்றும் பல மொழிகளில் பார்வையாளர்-களுக்கு சேவை செய்து வருகின்றது.




இன்று, MTA ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா முழுவதும் ஸ்டுடியோக்கள் மற்றும் நிலையங்களைக் கொண்டுள்ளது. மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அமைதியான செய்தியைப் பரப்புவதற்கு உறுதியளிக்கப்பட்ட ஒரே உண்மையான உலகளாவிய முஸ்லிம் தொலைக்காட்சி நெட்வொர்க்காக உள்ளது. அதன் திட்டங்கள் அஹ்மதியர்-களுக்கு கல்வி அளிப்பதற்கு மட்டுமல்லாமல், உலககெங்குமள்ள இஸ்லாம் பற்றிய தவறான எண்ணங்களை அகற்றவும் உதவுகின்றது.

உலகளாவிய பதட்டங்கள் அதிகரித்ததால் - மத்திய கிழக்கிலிருந்து கிழக்கு ஐரோப்பா வரை - ஹுஸூர்

(அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குரல் தனியாக ஒலித்தது. மூன்றாம் உலகப் போரின் வளர்ந்து வரும் அச்சுறுத்தல் மற்றும் அணுசக்தி மோதலின் பேரழிவு விளைவுகள் குறித்து அவர்கள் தொடர்ந்து உலகத் தலைவர்களை எச்சரித்தார்கள்.

இங்கிலாந்து பாராளுமன்றம், ஐரோப்பிய பாராளு-மன்றம், அமெரிக்காவின் கேபிடல் ஹில் மற்றும் பலவற்றில் உலகெங்கிலும் உள்ள பாராளுமன்றங்களில் அவர்கள் ஆற்றிய உரைகளில் - மற்றும் உலகத் தலைவர்களுக்கு நேரடியாக எழுதப்பட்ட பல கடிதங்கள் மூலம் - ஹுஸுர் நீதி, சமத்துவம் மற்றும் தார்மீக தலைமைக்கு அழைப்பு விடுத்தார்கள்.

முதலில், அவர்களது செய்தி கண்ணியமான சந்தேகத்துடன் பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது, உலகளாவிய மோதல்களும் அநீதிகளும் அதிகரித்து வருவதால், அவர்களுடைய எச்சரிக்கைகள் வெறும் வாதம் அல்ல. ஆனால் முன்னறிப்பு போன்றது என்பதை பலர் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.




ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இங்கிலாந்தில் வருடாந்திர தேசிய அமைதி கருத்தரங்கை நிறுவினார்கள். இது உலகம் முழுவதுமுள்ள அரசியல்வாதிகள், மார்க்கத் தலைவர்கள், வெளியுறவு அதிகாரிகள் மற்றும் கல்வியாளர்களை ஈர்த்தது. ஒவ்வொரு முக்கிய உரையிலும், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) தெளிவான வழிகாட்டுதலை வழங்குகிறார்கள் - நீதி இல்லாமல் சமாதானம் சாத்தியமில்லை. மேலும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் நேர்மை மற்றும் சமத்துவத்துடன் செயல்பட சீர்திருத்தப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

அதிகார சமநிலையின்மைக்கு எதிராக அவர்கள் அச்சமின்றிப் பேசுகிறார்கள், ஐ.நா.வில் உள்ள வீட்டோ அமைப்பு உலகளாவிய ஒற்றுமையைக் குலைத்து, அநீதியை உருவாக்குகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆயுதங்களுக்காக செலவிடப்படும் டிரில்லியன்கள் வறுமை, பசி மற்றும் நோய்களை ஒழிப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இந்த முயற்சிகளுடன், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) மனிதாபிமான திட்டங்களின் மிகப்பெரிய விரிவாக்கத்தை மேற்பார்வையிட்டார்கள். அவர்களது தலைமையில்: Humanity First ஆனது ஒரு உலகளாவிய NGO ஆனது, 65 நாடுகளில் செயல்படுகிறது. ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் IAAAE பல்வேறு நாடுகளில் மனிதாபிமான திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. மாதிரி கிராமங்கள், மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் சுத்தமான நீர் திட்டங்கள் உலகின் மிகத் தொலைதூர மூலைகளில் நிறுவப்பட்டுள்ளன.

மனிதகுலத்திற்கு நெருக்கடிகளின்போது - இயற்கைப் பேரழிவுகள் முதல் போர் சூழல்கள் வரை Humanity First தன்னார்வத் தொண்டர்கள் முதலில் வந்து கடைசியாக வெளியேறுகிறார்கள்.

ஜமாஅத் இப்போது உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களுக்கு ஒரு முன்மாதிரியாகக் கருதப்படுகிறது - நம்பிக்கையும் சேவையும் எவ்வாறு கைகோர்த்துச் செல்ல முடியும் என்பதைக் காட்டுகிறது.

ஜமாஅத் இப்போது 70 க்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குர்ஆனை மொழிபெயர்த்துள்ளது, மேலும் பல மொழி-களில் மொழிபெயர்ப்பில் உள்ளன. ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தலைமையின் கீழ், பல நாடுகளில் ஜாமிஆ நிறுவப்பட்டு, இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைப் பரப்புவதற்கு நன்கு பயிற்சி பெற்ற மார்க்க அறிஞர்களை உருவாக்குகிறது.

பள்ளிவாயில்கள் ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் அமெரிக்கா முழுவதும் குறிப்பிடத்தக்க விகிதத்-தில் தொடர்ந்து கட்டப்படுகின்றன. மேலும் அவை ஒவ்வொன்றும் அரசியல் அல்லது பிரிவினையின் அடையாளமாக அல்லாமல் அமைதி மற்றும் பிரார்த்தனையின் அடையாளமாக நிற்கின்றன.

உலகத் தலைவர்கள் கூட, சில அரசாங்கங்களால் அஹ்மதியர்கள் முஸ்லிம் அல்லாதவர்கள் என்று அறிவிக்கப்பட்டதை முழுமையாக அறிந்திருந்தாலும், இப்போது வெளிப்படையாக "இதுதான் நாம் பார்க்க வேண்டிய இஸ்லாம்" - அன்பு, கல்வி மற்றும் நல்லிணக்கத்தின் இஸ்லாம் என்று கூறுகிறார்கள்.

முஸ்லிமல்லாதவர் என்று அறிவிக்கப்படுவது வேதனையானது மற்றும் அநீதியானது என்றாலும், அல்லாஹ்வின் தூய திட்டம் இருப்பதை இப்போது நாம் காண்கிறோம். நம்மை பிரிப்பதன் மூலம், தீவிரவாதம், இஸ்லாமிய அரசியல் மற்றும் மதவெறி ஆகியவற்றிலிருந்து தெளிவான மாறுபாடாக இந்த சமூகத்தை ஒரு வழிகாட்டியாக வெளிச்சமாக நிற்க அனுமதித்தான்.

கிலா∴பத்தின் கீழ், ஜமாஅத் நீதி, ஒழுக்கம், சேவை மற்றும் அமைதியின் உலகளாவிய அமைப்பாக மாறியுள்ளது. முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், வாழ வேண்டும், சமூகத்திற்குப் பங்களிக்க வேண்டும் என்பதற்கு

நாம் வாழும் உதாரணமாகி விட்டோம். இவை அனைத்தும் வாழும் கலீ.்.பாவின் வழிகாட்டுதலின் மூலமேயாகும்.

உலகெங்கும் தற்போதைய நெருக்கடி போன்ற - நடந்து கொண்டிருக்கும் அட்டூழியங்களை எதிர்கொள்ளும் போது - Huzoor (aba) நீதி மற்றும் உடனடி அமைதிக்கு தொடர்ந்து அழைப்பு விடுத்துள்ளார்கள். அப்பாவிகளுக்காக ஆழ்ந்து பிரார்த்தனை செய்யுமாறு ஜமாஅத்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள், மேலும் இந்த சாத்தியமான ஏற்றுக் கொள்ள முடியாத அவலநிலையை தடுக்க நாடாளுமன்றங்-களிலும் மேடைகளிலும் குரல் எழுப்பியுள்ளார்கள்.

நீதிக்காக குரல் எழுப்புவது நம் அனைவருக்கும் கடமையாகும். மேலும் அந்த மௌனம் இனி ஒரு விருப்பமாக இருக்க முடியாது. ஒவ்வொரு ஜுமுஆ உரையிலும், ஹுஸூர் பிரார்த்தனை, அமைதி மற்றும் உலகளாவிய பொறுப்புக்காக தொடர்ந்து அழைப்பு விடுக்கின்றார்கள். அவர்கள் ஜமாஅத்திற்கு ஆன்மீக ஊட்டச்சத்தை மட்டுமல்ல, இன்னும் சிலர் அதை வழங்கும் நேரத்தில் தார்மீக மற்றும் உலகளாவிய தலைமைத்துவத்தை வழங்குகிறார்கள்.

கிலா.்.பத் என்ற இறை அமைப்பின் கீழ் இந்த அருளுக்குரிய ஜமாஅத்தின் நம்ப முடியாத பயணத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, உண்மையிலேயே அசாதாரணமான ஒன்றுக்கு சாட்சியாக இருக்கிறோம். ஒரு இறை வாக்குறுதியின் நிறைவேற்றம், நம் கண்களுக்கு முன்பாக விரிவடைகிறது.

100 ஆண்டுகளுக்கு முன்பு காதியான் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் தொடங்கியது, இப்போது உலகளாவிய ஆன்மீக இயக்கமாக மாறியுள்ளது, இஸ்லாத்தின் அமைதியான செய்தியை இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு கண்டத்திற்கும் பரப்புகிறது. இந்த மாற்றத்திற்கு மையமானது கிலா.்.பத்தின் வழிகாட்டும் ஒளியாகும். இது அரசியல் அல்லது அதிகாரத்தால் பிறக்கவில்லை. ஆனால் துஆ, தியாகம் மற்றும் இறை நியமனத்தால் நடந்ததாகும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தலைமையில், இந்த ஒளி இப்போது உலகின் மிகத் தொலைதூர மூலைகளை அடைந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும், ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் மடியில் அமர்கிறார்கள். காலத்தின் கலீ.்.பாவின் கைகளில் பைஅத் செய்வது, மனிதனுக்கு அல்ல. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் விருப்பத்திற்கு அடிபணிகிறார்கள். இப்போது, உலகம் குழப்பம், அநீதி மற்றும் மோதலின் இருளில் வளரும் போது, கிலா.்.பத்தின் இந்த ஒளி எப்போதும் பிரகாசமாக ஒளிர்கிறது. மனிதகுலத்தை அதன் படைப்பாளரிடம் திரும்ப அழைக்கிறது.


வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முக்கியமான பணி - அல்லாஹ்வால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பணி - மனிதகுலத்திற்கும் இறைவனுக்கும் இடையிலான தூரத்தைக் குறைப்பது, உண்மையான ஆன்மீகத்தை மீட்டெடுப்பது மற்றும் இதயங்களை தங்கள் இறைவனின் நினைவு மற்றும் அன்பை கொண்டு வருவது. நமது அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த புனித பணி இப்போது முழு பலத்துடன் முன்னேறி வருகின்றது.

புதிய முயற்சிகள், திட்டங்கள், தளங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலம் மார்க்கங்களின் ஆய்வு, அமைதி கருத்தரங்கம், உலக அளவில் மார்க்க மாநாடுகள் மற்றும் டிஜிட்டல் யுகத்தில் இறைஅழைப்பு உட்பட - ஜமாஅத் நவீன உலகத்துடன் அதன் சொந்த மொழியில் பேசுகிறது, ஆனால் இஸ்லாத்தின் நித்திய உண்மைகளுடன். நமது இளைஞர்கள் அல்ஹம்துலில்லாஹ், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நினைத்தது போல் - அமைதி, நம்பிக்கை மற்றும் பகுத்தறிவின் தூதர்களாக முன்னேறி வருகிறார்கள்.

இன்னும், இவ்வளவு முன்னேற்றம் இருந்தபோதிலும், இந்த பணியின் உண்மையான வெற்றி எண்கள் அல்லது கட்டிடங்களில் மட்டுமல்ல. ஆனால் அல்லாஹ்வுடனான நமது சொந்த தொடர்பில் உள்ளது. ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும்:

நான் என் படைப்பாளரிடம் நெருங்கி வருகிறேனா? வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணியை நான் நிறைவேற்றுகிறேனா? நான் கிலா.்.பத்தின் வழிகாட்டுதலை வார்த்தையில் மட்டுமல்ல. செயலிலும் தொழுகையிலும் பின்பற்றுகிறேனா?

### இன்று நமது உறுதிமொழியை புதுப்பிப்போம்:



உலக விஷயங்களை விட மார்க்கத்திற்கு முன்னு-ரிமை கொடுப்போம் என்று.

இஸ்லாத்தின் அழகை நம் வீடுகளிலும், நடத்தையி-லும், மனித குலத்திற்கு செய்-யும் சேவையிலும் பிரதிபலிக்க முயற்சிப்போம்.

கிலா.்.பத்தின் சுடர் மங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஆனால் இஸ்லாத்தின் செய்தி ஒவ்வோர் இதயத்தையும் ஒவ்வொரு வீட்டையும் அடையும் வரை தலைமுறை தலைமுறையாக அதை முன்னெடுத்துச் செல்வோம்.

கிலா.்.பத்தின் உண்மையான அடியாராக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

இந்த இறை நிறுவனத்தின் பாதுகாப்பு நிழலில் நாம் எப்போதும் இருப்போம்.

இஸ்லாத்தை உயிர்ப்பிக்கவும், மனிதகுலத்தை ஒன்றிணைக்கவும், நமது படைப்பாளனுடன் மீண்டும் ஒரு உயிருள்ள உறவை ஏற்படுத்தவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பை நிறைவேற்ற உதவியவர்களில் நாமும் ஒருவராக கருதப்படுவோம்.



# இறையிருப்பிற்கான இன்றைய சான்றுகள்

மதிப்பிற்குரிய டாக்டர் ஃபஹீம் யூனுஸ் குறைஷி சாஹிப்
(Naib Amir, Jama'at Ahmadiyya, USA)

✧✧✧ **தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்** ✧✧✧

நம்மில் யார் குளிரில் நடுக்கத்துடன் ஒரு தட்டை நீட்டி யாசிப்பவராக இருக்க விரும்புவார்கள்? ஓர் உதவியற்ற யாசகனாக, நிராகரிக்கப்படும் அபாயம் இருக்கும் யாரோ ஒருவர் முன் தலைகுனிந்து கொண்டு நிற்க யார் விரும்புவார்கள்?

இது ஒரு பயமுறுத்தும், அச்சுறுத்தும் எண்ணமாகும். குறிப்பாக சமூக ஊடகங்களின் இந்த யுகத்தில், மக்கள் ஏற்கனவே பல கவலைகள் மற்றும் பாதுகாப்பின்மைகளைக் கொண்டுள்ளனர். எனக்கு போதுமான செல்வம் உள்ளதா? நான் வசீகரமாக இருக்கின்றேனா? நான் போதுமான அளவு நேசிக்கப்படுகிறேனா? நான் நல்லவனா? இத்தகைய பாதுகாப்பின்மையை ஈடு செய்ய, மக்கள் ஒரு போலியான பிம்பத்தை முன்வைத்து, பாராட்டுக்களைத் தேடுகிறார்கள்; கவனத்தை ஈர்க்கிறார்கள்.

எனவே, எல்லா கவனமும் பார்க்கப்படுவதில்தான் இருக்கும்போது, மறைவான இறைவனைக் கண்டுபிடிப்பது எளிதானது அல்ல. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், புனித குர்ஆனைப் பின்பற்றுவதன் மூலம், வாழும்இறைவனின் முகத்தைப் பார்க்கலாம் என்று உறுதியளிக்கிறார்கள்.

اس کی پیروی سے زندہ خدا کا چہرہ نظر آجاتا ہے

புனித குர்ஆன் ஒரு பௌதிகப் பொருள் என்பதால் இறைவனின் ஆதாரத்தைத் தேடுவதற்கான சிறந்த வழிகளில் இதுவும் ஒன்றாகும். நீங்கள் அதைப் பார்க்கலாம். அதைத் தொட்டு, அதை ஆராய்ந்து, இது எங்கிருந்து வந்தது என்று கேட்கலாம்? 1400 ஆண்டுகளுக்கு முன்பு ஓர் எழுத்தறிவில்லாத மனிதர் எப்படி இந்த நூலை சொந்தமாகத் தயாரித்தார் என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

இன்று நாம் நமது 'நாத்திக நண்பருடன்' வாதம் செய்யப் போவதில்லை, மாறாக நாம் நமக்குள் கலந்துரையாடுவோம். ஏனென்றால், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நமக்குத் திரும்பத் திரும்ப நினைவூட்டியிருக்கின்றார்கள். நமது செயல்கள் மற்றும் நோக்கங்கள் அனைத்திலும் அல்லாஹ்வை மையமாக வைத்துக் கொள்ளுங்கள். இதைக் கருத்தில் கொண்டு, திருக்குர்ஆனிலிருந்து இறைவனின் மூன்று அடையாளங்களை மட்டும் ஆய்வு செய்வோம்.

முதலாவது ஒரு மம்மியின் அடையாளம். புனித குர்ஆன், நீரில் மூழ்கும் நேரத்தில் இறைவனுக்கு அடிபணிய விரும்பிய ஃபிர்அவ்னின் கதையை விவரிக்கிறது. அல்லாஹ் சூரா யூனுஸில் "இன்று நாம் உன்னை உடலளவில் மட்டுமே காப்பாற்றுவோம். அதனால் நீ உனக்கு பின்வருபவர்களுக்கு ஓர் அடையாளமாக இருக்கலாம்" என்று கூறுகின்றான். கிட்டத்தட்ட 3000 ஆண்டுகளுக்குப் பிறகு, 1898-ல் பிரெஞ்சு ஆய்வாளர் Victor Loret மேற்கு லக்சரில் ஒரு மம்மியைத் தோண்டி எடுத்தபோது, அல்லாஹ்வின் இருப்பிற்கான ஆதாரங்களை அவர் கண்டுபிடித்ததாக அவருக்குத் தெரியாது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இந்த மம்மியின் போர்வைகளில் உள்ள மை எழுத்து 'மெர்னெப்தா' என்ற பெயரை உறுதிப்படுத்தியதாகக் காட்டினர், இது குர்ஆன் குறிப்பிட்ட அதே ஃபிர்அவ்னின் உடல் என்பதை நிரூபிக்கின்றது. இந்த அடையாளம் இப்போது கெய்ரோவில் உள்ள எகிப்திய நாகரிகத்தின் தேசிய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது. வேறு எந்த புனித நூலும் இந்தக் கூற்றை முன்வைக்கவில்லை, அது பின்னர் தொல்பொருளியல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இது தற்செயலான ஒன்றா?



இரண்டாவது அடையாளம் ஈ பற்றியது. மனிதர்களைப் போலவே, 99.9% விலங்கினங்களுக்கும் உட்புற செரிமான அமைப்பு உள்ளது. அதாவது நாம் உணவை சாப்பிட்ட பிறகு அது ஜீரணமாகிறது. ஆனால் வெளிப்புற செரிமான அமைப்பு உள்ள 0.1% இனங்களில் ஈயும் ஒன்று. அதாவது அது உணவில் முதலில் செரிமானத்திற்காக ஒரு திரவத்தை உமிழ்ந்து பின்னர் அதை உட்கொள்கின்றது. கோட்பாட்டளவில், ஈயை விட சிங்கத்தின் பிடியிலிருந்து உணவை மீட்டெடுப்பது எளிது, ஏனெனில் ஓர் ஈயின் உணவு ஏற்கனவே ஓரளவு ஜீரணமாகி விட்டது. அல்லாஹ் சூரா ஹஜ்ஜில் "அல்லாஹ்வுக்குப் பதிலாக நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்களால் ஓர் ஈயைக் கூட உருவாக்க முடியாது. இருப்பினும் ஓர் ஈ அவர்களிடமிருந்து எதையேனும் பறித்துச் சென்றால், அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சித்தாலும் அவர்களால் அதை மீட்டெடுக்க முடியாது" என்று கூறுகிறான். 100 ஆண்டுகளுக்கு முன்பு வரை

பூச்சியியல் வல்லுநர்கள் இந்த உண்மையை அறிந்திருக்க -வில்லை. 1400 ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக்குச் செல்லாத ஒரு மனிதர் இந்த அரிய, மறைக்கப்பட்ட பண்பை எப்படி விவரித்தார்கள்?

மூன்றாவது அடையாளம் நம்மை பள்ளி நாட்களுக்கு அழைத்துச் செல்லும். எனது பள்ளிப் பையில் சுமார் 10 புத்தகங்கள் இருந்ததால் எவ்வளவு கனமாக இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் இன்று நாம் 256 ஜிபி போனில் 10, 10,000 அல்ல. 100,000 புத்தகங்களை எளிதாக எடுத்துச் செல்ல முடியும். மீண்டும், புனித குர்ஆன் பிந்தைய நாட்களில் நூல்கள் விரிவடையும் போது வயிதஸ் ஸுஹுஃபு நுஷிரத் என்று கணித்துள்ளது. ஒரு புத்தகத்தைப் படிக்காத ஒரு மனிதர், சீனாவில் முதல் புத்தகம் வெளியிடப்படுவதற்கு ஏறக்குறைய 200 ஆண்டு -களுக்கு முன்பே இந்தக் கணிப்பைச் சொன்னது எப்படி?



திருக்குர்ஆன் வெறும் மூன்று வசனங்களை மட்டும் ஆதாரமாக வழங்கவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதியாவில் குர்ஆனின் இறைத்தோற்றம் குறித்து 300 வாதங்களை வழங்கினார்கள். குர்ஆன் பெருவெடிப்பு, விரிவடையும் பிரபஞ்சம், நீர்சுழற்சி, அமிலமழை, கடல்கள் ஒன்றிணையாதது, கடலுக்கு அடியில் இருள், எல்லாவற்றின் இணைகள், கருவியல், பரிணாம வளர்ச்சி மற்றும் அணுசக்தி பேரழிவு பற்றிப் பேசுகிறது. இவையெல்லாம் வெறும் தற்செயலான நிகழ்வுகளா? பிற வேதங்களில் ஏன் இதே போன்ற ‘தற்செயலான நிகழ்வுகளை’ நாம் காணவில்லை?

கடந்த கால அறிவியல் உண்மைகளை குர்ஆன் வசனங்களுடன் பொருத்துகிறோம் என்று சிலர் வாதிடுகின்றனர். எதிர்காலத்தில் நிறைவேறும் குர்ஆன் கூற்றுகளை அவர்கள் கேட்கின்றனர். இஸ்லாம் அஹ்மதிய்யத் நல்ல கேள்விகளைப் பாராட்டுவதால், எதிர்காலத்தைப் பற்றிய சில குர்ஆனின் கணிப்புகளை இங்கே நாம் பார்ப்போம்:

முதலாவதாக, நீங்கள் அண்டவியலில் ஆர்வமாக இருந்தால், இன்று பூமிக்கு வெளியே எந்த உயிரினங்களும் இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் ஒருநாள் விஞ்ஞானிகள் அதைக் கண்டுபிடித்தால் சூரா அஷ்ஷூராவில் அல்லாஹ்வால் முன்னறிவிக்கப்பட்ட இறைவனின் அடையாளம் என்பதை நம் குழந்தைகள் நினைவில் கொள்ள வேண்டும்.

“வானங்களையும் பூமியையும் படைத்ததும், இரண்டிலும் அவன் பரப்பிய உயிரினங்களும் அவனுடைய அடையாளங்களில் ஒன்றாகும்.

இரண்டாவதாக, நீங்கள் Technology-யில் ஆர்வமாக இருந்தால், AI எல்லாவற்றிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதை அறிவீர்கள். வேலைவாய்ப்பு, வரலாறு நமது உண்மை நிலை என எல்லா துறைகளிலும் அது ஆதிக்கம் செலுத்துகின்றது. எதிர்காலத்தில் பெரிய மொழி மாதிரிகள் மோசமான, மாசுபட்ட தரவுகளில் பயிற்சி பெற்றால் அவை உண்மை சிதைவுக்கு வழிவகுக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எடுத்துக்காட்டாக, தீய Program மூலமாக போலி குர்ஆன் வசனங்களை உருவாக்கி, Search Algorithm-ல் அவற்றை முதலாவதாக காட்டலாம். ஆனால் அல்லாஹ் இதுவரை செய்தது போல் குர்ஆனை துல்லியமான துல்லியத்துடன் பாதுகாப்பான் - நிச்சயமாக, இந்த அறிவுரையை நாமே இறக்கினோம், நிச்சயமாக நாமே அதனை பாதுகாப்போம். AI ஆல் குர்ஆனை மாற்ற முடியாது. AI வருவதற்கு முன்பே முந்தைய வேதங்கள் எதுவும் அவற்றின் அசல் வடிவத்தில் இல்லை.

மூன்றாவதாக, ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் பூத உடலுடன் திரும்புவார்கள் என்றும் நம்பும் பில்லியனிற்கும் அதிகமான மக்களுக்கு, குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது: வானத்திலிருந்து யாரும் இறங்கவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் 120 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு ஆணித்தரமாக முன்னறிவித்தார்கள். “ஒருவரும் வானத்திலிருந்து இறங்கி வர மாட்டார்கள் என்பதை நன்றாக நினைவில் வையுங்கள். இன்று உயிருடன் இருக்கும் நம் எதிரிகள் அனைவரும் இறந்து விடுவார்கள். அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா வானத்திலிருந்து இறங்கி வருவதைக் காணமாட்டார்கள். அவர்களுடைய பிள்ளைகளும் இறந்து விடுவார்கள். மர்யமின் மகன் ஈஸா வானத்திலிருந்து இறங்கி வருவதை அவர்களில் யாரும் பார்க்கமாட்டார்கள். பின்னர் அவர்களின் மூன்றாம் தலைமுறையும் இறந்துவிடும். மேலும் மர்யமின் மகன் இறங்கி வருவதை அவர்களும் பார்க்கமாட்டார்கள். அப்போது இறைவன் அவர்கள் மனதில் பெரும் கவலையை ஏற்படுத்துவான்.

முன்னறிவிக்கப்பட்ட அந்தக் கவலையான காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம் அல்லவா? அல்லாஹ் இருக்கிறான் என்பதில் 100% உறுதியாக இல்லாமல் யார் இவ்வளவு நம்பிக்கையுடன் பேச முடியும்?

நிச்சய உறுதி, ஆதாரங்களைச் செயலற்ற முறையில் கேட்பதன் மூலம் வர முடியாது. தகவலைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிதானது. இறைஇருப்பிற்கான 20 சமகால ஆதாரங்களைப் பட்டியலிடவும், சில நொடிகளில் தகவலைப் பெறவும் யாரேனும் ChatGPT இடம் கேட்கலாம்.

ஆனால் தகவல் உறுதியானதா என்று பார்ப்பதற்கு, ChatGPT-ஐ இருமுறை சரிபார்ப்பது மட்டுமின்றி, ஆதாரங்களை அனுபவிப்பதற்கும் நமது பங்கில் செயல் முயற்சி தேவைப்படுகிறது. உங்கள் Mobiley; Weather App-ல்

மழையைப் பார்ப்பது ஒரு விஷயம். அந்த மழையில் நனைந்து வெளியில் அடியெடுத்து வைப்பது மற்றொன்று. எனவே நாம் ஏன் அதை செய்யக் கூடாது?

ஏனெனில் இது எளிதானது அல்ல. அது மிகவும் கடினம். இது ஒரு பயமுறுத்தும் மற்றும் அச்சமூட்டும் எண்ணம். ஏனெனில் நமது அறிவுசார் அகந்தையை நாம் அழித்து விட வேண்டும். ஃபனா பக்கா லிக்கா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் விவரிக்கின்றார்கள். அல்லாஹ் கா ஃபகீர் பன்னா படேகா. நாம் அல்லாஹ்வின் முன் பணிவோடு மன்றாடுபவர்களாக மாற வேண்டும்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இவ்வாறு கூறிய போது இந்த பணிவை நடைமுறைப்படுத்தினார்கள்: ரப்பி இன்னி லிமா அன்ஸல்த இலய்ய மின் கைரின் ஃபகீர். என் இறைவா! நீ நன்மையிலிருந்து எதை வழங்கினாலும் அதற்கு நான் தேவையுடவனாயிருக்கின்றேன்.

மேலும் அனைத்து நபிமார்களின் அரசரான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த அளவில் இந்தப் பணிவை மேற்கொண்டார்கள் என்பதை உணர, காலப்போக்கில் பின்னோக்கிச் செல்வோம்.

632 ஆம் ஆண்டு. மக்கா வெற்றி கொள்ளப்பட்டது. ரஸூல் (ஸல்) அவர்களுக்கு அது விடைபெறும் ஹஜ்ஜாக இருந்தது. அவர்கள் அரஃபாத் மலையில் நின்று



சொற்பொழிவாற்றினார்கள். இலண்டனில் நிரம்பிய Wembeley ஸ்டேடியத்தில் இருக்கும் மக்களை விட அன்று அவர்கள் சொல்வதைக் கேட்க கூடியிருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாகும். மேலும் தமது வெற்றியைப் பற்றி பெருமை பேசுவதற்குப் பதிலாக, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம் இறைவனிடம் பின்வரும் வார்த்தைகளில் மன்றாடினார்கள்:

நான் ஓர் ஏழை. எளியவனைப் போன்று உன்னிடம் கேட்கிறேன்.

பயம் மற்றும் அச்சத்துடன் உன்னுடைய உதவி மற்றும் அடைக்கலத்தை வேண்டுகின்றேன்.

எனது அனைத்து பாவங்களையும் ஒப்புக் கொண்டவனாக உனது முன்னிலையில் நிற்கின்றேன்.

நான் பலவீனமுற்ற உதவி இல்லாத ஒருவனாக உன்னிடம் கேட்கிறேன்.

ஆம், நான் ஓர் இழிவான குற்றவாளியைப் போன்று உன் முன்னிலையில் மன்றாடிக் கேட்கிறேன்.

தடுமாறி விடுவேனோ என அஞ்சும் பார்வையற்றவரைப் போல, நான் உன்னிடம் துஆ கேட்கிறேன்.

எனது தலை உனக்கு முன்னால்குனிந்துள்ளது.

எனது கண்ணீர் உனது முன்னிலையில் வழிந்தோடு -கின்றது.

எனது உடல் உனக்குக் கட்டுப்பட்டதாக சஜ்தாவில் விழுந்து கிடக்கிறது.

மேலும், மூக்கில் புழுதி படிந்துள்ளது.

அல்லாஹ்வே! உனக்கு முன்னால் துஆ செய்வதை விட்டும் நீ என்னை பேறிழந்தவனாக ஆக்காதிருப்பாயாக!

மேலும் என்னுடன் கருணையுடனும், இரக்கத்துடனும் நடந்து கொள்வாயாக.

எல்லாரையும் விட அதிகமாக வேண்டுதல்களை ஏற்பவனே! எல்லாரையும் விட சிறப்பாக வழங்குபவனே! எனது துஆவை ஏற்றுக்கொள்வாயாக!

இதுவே உறுதியுடன் இறைவனைப் பெறுவதற்கான வழியாகும். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் போல் எவராவது பல ஆண்டுகளாக மன்றாடியும் அவரது பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ளபடாமல் இருக்கின்றதா? ,அவர்கள் இறைஇருப்பை உணராமல் இருக்கின்றார்களா? மேலும் அல்லாஹ்வின் முன் இறைஞ்சுபவர்கள் நிராகரிப்புக்கு அஞ்சமாட்டார்கள். நிராகரிப்பு Instagram மற்றும் TikTok-இல் நிகழ்கிறது, அங்கு நாம் likes மற்றும் hearts கேட்கின்றோம். மக்கள் அன்பிற்காக ஏங்குகின்ற DatingApps-ல் நிராகரிப்பு நிகழ்கிறது. ஆனால் அல்லாஹ்வின் அன்பிற்காக நாம் மன்றாடும்போது நிராகரிக்கப்படும் அபாயம் இல்லை.

மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமக்குத் தேவையான விடாமுயற்சி மற்றும் உறுதியை நினைவூட்டுகிறார்கள்.

ஒரு யாசகன் கூட மிகப்பெரும் ஒரு கருமியின் வீட்டு வாசலில் விடாப்பிடியாக உட்கார்ந்திருக்கும் போது, ஏதாவது பெற்றுக் கொண்டே எழுகிறான்.

அல்லாஹ்வோ கருணையுள்ள, பரிவுமிக்க இறைவன் ஆவான்.

அவனுடைய வாசலில் சென்று ஒருவர் வெறுங்கையுடன் திரும்புவது சாத்தியமில்லை..

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) இங்கே ஒரு செயல் சூத்திரத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். பணிவுடன், விடாமுயற்சியுடன், உறுதியுடன் மன்றாடுங்கள் மற்றும் இறைவன் இருக்கின்றான் என்பதற்கான அத்தாட்சியை அனுபவியுங்கள்.

ஆனால் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேதனையான கொடுமையைப் பற்றி நம் இளைஞர்கள் கேள்விகளைக் கேட்கின்றார்கள்: பிரார்த்தனைகள் எப்போதும் பதிலளிக்கப் -படுகின்றன என்றால், அவர்கள் கேட்கிறார்கள். பாலஸ்தீனிய

பெற்றோர்களின் துஆக்கள் ஏன் நிராகரிக்கப்படுகின்றன? காசாவில் உள்ள குழந்தைகளை துண்டு துண்டாக வெட்ட இறைவன் ஏன் அனுமதிக்கின்றான்? இப்படிப்பட்ட கொடுமையிலிருந்து ஒருவர் எப்படி தப்பிக்க முடியும்?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது குழந்தைகளை இழந்த வேதனையைத் தாங்கிக் கொண்டார்கள். அவர்கள் அந்த குழந்தைகளுக்காக துஆ செய்யவில்லையா? இருப்பினும், இறைவனின் இருப்பை அவர்கள் ஒருபோதும் சந்தேகிக்கவில்லை, ஏனென்றால் சில பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு பல தசாப்தங்கள் எடுக்கும் மற்றும் சில வெவ்வேறு வழிகளில் ஏற்றுக் கொள்ளப்படு -கின்றன.

அன்பிற்குரிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த அப்பாவி குழந்தைகளை தியாகிகள் என்று அழைத்தார்கள். மேலும் அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்கள் என்று கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் உணரவில்லை. நாம் இந்த முழு சம்பவத்தைப் பற்றி அறியவில்லை. நாம் அவர்களுக்கான அல்லாஹ்வின் வெகுமதியை இன்னும் பார்க்கவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு ஹதீஸை நமக்கு நினைவூட்டுகிறார்கள். தீர்ப்பு நாளில், துன்பங்களுக்கு ஆளான மக்களுக்கு அவர்களின் வெகுமதி அளிக்கப்படும்போது, ஆரோக்கியமானவர்கள் அவர்கள் உலகில் இருந்தபோது அவர்களின் தோல்களைக் கத்தரிக்கோலால் வெட்டப்பட்டிருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். இறுதியாக, எந்த ஹிட்லரும், எந்தக் குற்றவாளியும் எதிலிருந்தும் தப்பிக்க முடியாது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அல்லாஹ்வின் வாக்குறுதியை நாம் கேட்கிறோம்: “அல்லாஹ் அவர்களுக்கு மிகப்பெரிய தண்டனையை வழங்குவான், நிச்சயமாக, அவர்கள் எம்மிடமே திரும்பி வர வேண்டியதிருக்கின்றது. பின்னர், அவர்களிடம் கேள்வி கணக்குக் கேட்பதும் நிச்சயமாக எம்முடைய வேலையாகும்.”

அரசன் இல்லை என்பதை கொடுங்கோன்மை நிரூபிக்காது. அவனது இருப்பை புறக்கணிப்பதால் ஏற்படும் விலையை அது நிரூபிக்கின்றது.

எனவே அவனுடைய இருப்பை உணர, நாம் பணிவுடனும், விடாமுயற்சிடனும் மற்றும் உறுதியுடனும் துஆ செய்ய வேண்டும்.

முதல் படி ஒரு பணிவான இறைத்தூதர் ஒரு யாசகனிடமிருந்து எவ்வாறு கற்றுக் கொள்ள முடியும் என்பது ஆச்சரியமாக இருக்கிறது, ஆனால் இந்தப் பெயர் தாங்கி அறிஞர்கள் ஓர் இறைத்தூதரிடமிருந்து கற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். கர்வத்துடன் கேலி செய்த ஒரு யாசகனுக்கு பணம் கொடுப்பீர்களா? எனவே முதல் படி கர்வத்தை அழித்தலாகும்.

இரண்டாவது படி விடாமுயற்சியாகும்: சிலர் நான் துஆ செய்கிறேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை என்று கூறுகிறார்கள். LIGO விஞ்ஞானிகள் குழு முதல் ஈர்ப்பு அலையைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு 40 ஆண்டுகள் சோதனை செய்தது. 40 ஆண்டுகள் ஹஸ்ரத் யாகூப் (அலை) அவர்களும் தமது யூசுஃபுக்காக அல்லாஹ்விடம் 40 ஆண்டுகள் மன்றாடினார்கள். நாம் தொடர்ந்து முயல வேண்டும். பரிசோதனையைத் தொடங்குங்கள்... முடிவுகள் உடனடியாக வரலாம் அல்லது அதற்குப் பலஆண்டுகள் ஆகலாம். மேலும் சிறந்த சோதனைகளில் ஒன்று தஹஜ்ஜுத் ஆகும்.

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இரவின் பாதி அல்லது மூன்றில் இரண்டு பங்கு நேரம் முடிந்ததும், அருள் நிறைந்த அல்லாஹ், கீழ் வானத்திற்கு இறங்கி, “அவன் கொடுப்பதற்கு அடியார் யாராவது இருக்கிறாரா? அவன் பதிலளிப்பதற்கு அடியார் யாராவது இருக்கிறாரா? என்று கேட்கிறான். விடியற்காலை வரை அல்லாஹ் அதைச் சொல்லிக் கொண்டே இருக்கிறான்.

இவ்வாறு கற்பனை செய்து பாருங்கள். தெருவில் இருக்கும் யாசகன் ஒருவனுக்கு தினமும் அதிகாலை 3:00 மணிக்கு ஓரிடத்தில் தங்கம் கிடைக்கும் என்றால் அவன் தினமும் காலையில் அங்கேயே இருப்பான். ஆனால் அதிகாலை 3:00 மணிக்கு, நாம் நெட்ஃபிளிக்ஸின் தொகுப்பை மட்டுமே பார்க்கின்றோம் என்றால், நாம் இறைவனை உணர முடியாது என்று ஆச்சரியப்பட வேண்டுமா?

அதிகாலை 3:00 மணிக்கு எழுவது கடினம். TikTok-ல் படங்களை இடுவது எளிதானது, தீங்கிழைக்கும் இதயங்களை சுத்தப்படுத்துவது கடினம். Redit-ல் இறைவனை கேலி செய்வது எளிது. ஆனால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் போல் அவனிடம் பணிவுடன் மன்றாடுவது கடினம். இத்தகைய கடின உழைப்பு நம்மை எரிச்சலூட்டுகிறது. அதனால்தான் ரூமி சொன்னார்: ஒவ்வொரு உரசலிலும் உனக்கு எரிச்சல் ஏற்பட்டால், நான் எப்படி உன் கண்ணாடியைப் பளபளப்பாக ஆக்குவேன்?

மூன்றாவது படி உறுதியான நம்பிக்கை: ஒரு ஹதீஸ் குத்ஸியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் “என்னைப் பற்றி என் அடியான் என்ன நினைக்கிறானோ அதைப் போன்று இருக்கின்றேன்” என்று கூறுகிறான். ஒரு யாசகன் கொடுப்பவரைக் காண்பதால் மட்டும் குளிரில் நிற்க மாட்டான். மாறாக அவர் வழங்கக்கூடியவராக இருக்கிறார் என்று நம்புவதாலேயே குளிரில் நிற்கின்றான். அதாவது, அவன் நீண்ட நேரம் குளிரில் நடுங்கினாலும் தனது தட்டை ஏந்தினால் கொடுப்பவர் ஒரு நாணயமாவது கொடுப்பார் என்று நம்புகின்றான்.

பணிவு, விடாமுயற்சி மற்றும் உறுதியுடன் பிரார்த்தனை செய்யும் இந்த முறை பல நூற்றாண்டுகளாக வேலை செய்கிறது. ஒவ்வொரு இறைத்தூதரின் வாழ்க்கையும் சாட்சியாகும். ஆனால் விமர்சிக்கும் மனங்கள் வாழும் உதாரணங்களைத் தேடுகின்றன. எனவே நாம் அனைவரும் அறிந்த ஒரு மனிதரைப் பற்றி பேசலாம். இந்த மனிதரின் உள்ளம் எவ்வளவு சுத்தமாக இருந்திருக்கும்? அல்லாஹ்வின் படைப்பை அவர் எவ்வளவு பணிவுடன் நடத்தியிருக்க வேண்டும்? எத்தனை மணி நேரம் அவர் தஹஜ்ஜுதில்

நின்றிருக்க வேண்டும். எந்த நம்பிக்கையுடன் அவர் கொடுத்தவர் மீது நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். அல்லாஹ் அவரை ஐந்தாவது கிலா.ஃபத்தின் பதவிக்குத் தேர்ந்தெடுத்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கிலா.ஃபத்தை அல்லாஹ்வின் வல்லமையின் இரண்டாவது தோற்றமாகக் கூறுகிறார்கள்.

கடினமாக உழைக்கத் தயாராக இருக்கும் எவருக்கும் இந்த முறை வேலை செய்கிறது. 1939-இல், மௌலவி நசீர் அஹ்மத் சாஹிப் முபஷ்ஷிர் கானாவில் இஸ்லாம் அஹ்மதிய்யத்தைப் போதித்துக் கொண்டிருந்தார்கள். மஸீஹின் காலத்தில், முன்னறிவிப்புகளின்படி, பூகம்பங்கள் ஏற்படுவதாக மக்கள் வாதிட்டனர். இப்போது கானாவிலிருந்து Tectonic Plate, 3000 கி.மீ தொலைவில் இருக்கின்றது. கானாவில் நிலநடுக்கம் ஏற்படுவது அரிதான ஒரு விஷயமாகும். அங்கு 75 ஆண்டுகளுக்கு முன்பு மிகப்பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் மௌலவி சாஹிப் உலக முரண்பாடுகள் எவ்வளவு பலவீனமானவை என்று நினைக்கவில்லை. அவர்கள் தம் இறைவன் எவ்வளவு வலிமையானவன் என்று நினைத்தார்கள். அதனால் அவர்கள் “அல்லாஹ் இந்த மக்கள் பூகம்பத்தை அடையாளமாக கேட்கிறார்கள்” என்று உறுதியுடன் துஆ கேட்டார்கள். ஒரு வாரத்தில் கானாவில் 6.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. 17 பேர் இறந்தனர். 180 பேர் உடனடியாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். கானா 1939 ஆம் ஆண்டு முதல் கடுமையான நிலநடுக்கத்தை அனுபவித்த -தில்லை. இது மற்றொரு தற்செயல் நிகழ்வா அல்லது நான், என் அடியான் என்னைப் பற்றி நினைப்பது போல் இருக்கின்றேன் என்பதா?

நாமும் இந்த முறையைப் பின்பற்றலாம். நீங்கள் இறைவனுக்காக ஆகி விடுவீர்கள் என்றால் பிறகு நிச்சயமாக இறைவன் உங்களுக்காக ஆகி விடுவான்.

ஆனால் சுய விளம்பரம் மற்றும் தற்புகழ்ச்சியின் யுகத்தில், ஏன் யாசிப்பவராக இருக்க வேண்டும்? ஏனென்றால் வேறு எதுவும் வேலை செய்யவில்லை. போலிப் புகழ்ச்சி, போலி நண்பர்கள், போலி ஆடம்பரங்கள் நமக்கு கவலைகளைத் தருகின்றன; மகிழ்ச்சியை அல்ல.

அல்லாஹ்வை நினைவுகூர்வதில்தான் உள்ளங்கள் ஆறுதல் அடைய முடியும். அல்லாஹ்வின் முன்னிலையில் மன்றாடுபவர்களாக மாறுவது நமது பாதுகாப்பின்மைகளை மனநிறைவாக மாற்றுகின்றது. ஏனெனில் அல்லாஹ்விடம் நாம் எப்போதும் நல்லவர்கள். மேலும் அல்லாஹ்விடம் மன்றாடுபவர், வேறு யாரிடமும் யாசிக்க வேண்டியதில்லை.

மேலும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். சமூக ஊடகங்களில் உள்ள likes, Heart-ம் நம்மை நேசிக்கப்படுபவர்களாக ஆக்குவதில்லை. ஏறக்குறைய 90% மக்களுக்கு, ‘லைக்’ பெறுவதன் மகிழ்ச்சி ஒரு மணி நேரத்திற்கும் குறைவாகவே நீடிக்கின்றது என்று ஓர் ஆய்வு காட்டுகிறது. அல்லாஹ்வின் அன்பைப் பெறுவது, மற்றவர்களிடமிருந்து உண்மையான அன்பைப் பெற்றுத் தருகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் ஓர் அடியாரை நேசிக்கும்போது, அவன் ஜிப்ரீலை அழைத்து, “நான் இன்னாரை நேசிக்கிறேன். எனவே அவரை நேசி என்று கூறுகிறான். பின்னர் ஜிப்ரீல் அவரை நேசிக்கிறார். பின்னர் ஜிப்ரீல் வானவர்களிடம் அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான் என்று அறிவிக்கிறார். எனவே அவரை நேசிக்க வானவர்களிடம் கூறுகிறார் பின்னர் வானவர்களும் அவரை நேசிக்கிறார்கள். பின்னர் அவர்கள் பூமியில் உள்ள மக்களை அவரை நேசிக்க வைக்கிறார்கள். ஹஸ்ரத் கலீ.ஃபத்துல் மஸீஹ் மீது நம் உள்ளங்கள் எவ்வாறு ஈர்க்கப்படுகின்றன என்பதைப் பாருங்கள். இந்த உண்மையான அன்பு Algorithm -களிலிருந்து வரவில்லை. அது விண்ணிலிருந்து வருகிறது.

இறுதியில், பிரச்சினை ஆதாரம் இல்லாதது அல்ல. பிரச்சினை ஆணவத்தின் மிகுதியாகும். அல்லாஹ்வின் இருப்பிற்கான ஆதாரம் எல்லா இடங்களிலும் உள்ளது. ஆனால் ஆணவத்தை அழிக்காமல் ஒற்றுமை இல்லை. யாசிப்பவர் முதலில் தன் தட்டை நீட்டும் வரை எந்த நாணயமும் விழாது. தஹஜ்ஜுதுக்காக எழுந்து, தட்டுகளை நீட்டுவோம்... அவனைப் பற்றி பேசுவதற்குப் பதிலாக, அவனுடன் பேசலாம். இறைவன் இருக்கின்றான் என்பதற்கான ஆதாரத்தை நாம் உண்மையாகவே தேடினால், நம்முடைய துஆக்களை ஏற்றுக் கொள்ளும்படி அவனிடம் மன்றாடுவோம், நம் கண்களை அடையும்படி மன்றாடுவோம், நிராகரிப்புக்கு அஞ்சாமல் அவனிடம் பிரார்த்திப்போம். ஏனென்றால்.

یہ نا ممکن ہے کہ کوئی اس کے دروازہ پر گرے اور خالی اٹھے۔

அவனது வாசலில் ஒருவர் விழுந்து கிடந்து, வெறுங்கையுடன் திரும்புவது சாத்தியமே இல்லை. நான் என்னுடைய அடியான் என்னைப் பற்றி நினைப்பது போல இருக்கின்றேன்.

**மக்களே! உங்களிடம் உதாரணமாகக் கூறப்படுவதைக் கவனமாகக் கேளுங்கள். நீங்கள் அல்லாஹ்வையன்றி எவர்களை அழைக்கின்றீர்களோ அவர்களால் ஓர் ஈயைக் கூடப் படைக்க முடியாது. அதற்காக அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் சரியே. இது மட்டுமின்றி, ஓர் ஈ அவர்களிடமிருந்து ஒரு பொருளைப் பறித்துச் சென்றால் அவர்களால் அதனிடமிருந்து அதனை(க்கூட) விடுவிக்க முடியாது. அழைப்போரும் அழைக்கப்படுவோரும் மிக பலவீனமானவர்களே ஆவர்.**

(திருக்குர்ஆன் 22:74)

# கிலாஃபத்தின் நிழலின் கீழ் பரஸ்பர அனுதாபம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் முக்கியத்துவமும் நமது பொறுப்பும்



**மதிப்பிற்குரிய டாக்டர் சர் இஃப்திகார் அஹ்மத் அயாஸ் சாஹிப்**
(Chairman, International Human Rights Committee, UK)

**தமிழாக்கம்: N. முபாரக் அஹ்மத்**

மனித குலத்திற்கு அல்லாஹ்வின் மிகப்பெரிய ஆன்மிக அருள், ரிஸாலத் (தூதுத்துவம்), நுபுவ்வத் (நபித்துவம்) மற்றும் அதை முழுமையாகப் பின்பற்றி வெளிப்படும் கிலா∴பத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத் (நுபுவ்வத்தை தொடர்ந்து வரும் கிலா∴பத்) ஆகும். இந்த அருளின் மூலமாகவே மனித குலத்திற்கு அல்லாஹ்வைப் பற்றிய ஞானமும், அவனை அடையாளம் காண்பதும் கிடைக்கிறது. மேலும் (அதன் மூலமாக மனிதர்கள்) பரஸ்பரம் சகோதரர்களாக மாறுகிறார்கள். நபிமார்களின் இருப்பு மூலமாகவே அல்லாஹ் தனது ருபூபிய்யத்தின் (படைத்து பராமளித்தலின்) ஆற்றல்களை உலகில் வெளிப்படுத்துகிறான். மேலும் தனது மகத்தான பண்புகளின் வெளிப்பாடுகளை தனது இந்த அன்பானவர்களின் இருப்பு மூலமாக உலகில் வெளிப்படுத்துகிறான். உண்மையில், உண்மையான தவ்ஹீதும் (ஏகத்துவம்), இறைவனைப் பற்றிய அறிவும், முழுமையான ஞானத்தைப் பின்பற்றுவதும் இந்த மாபெரும் குழுவுடன் தொடர்புடையதாக உள்ளது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “இறைவனின் இருப்பை அடையாளம் காட்டக் கூடியவர்களும், அவனது இணையற்ற ஏகத்துவத்தன்மையை பற்றி மக்களுக்குக் கற்றுக் கொடுப்பவர்களும் நபிமார்கள் மட்டுமே ஆவார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த புனிதர்கள் உலகில் வந்திருக்காவிட்டால், நேரான பாதையை உறுதியாகக் கண்டறிவது சாத்தியமற்ற -தாகவும், முடியாத காரியமாகவும் இருந்திருக்கும்.” (ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின், தொகுதி 22, பக்கம் 114)

அல்லாஹ்வின் இந்த அன்பான நபிமார்களின் உள்ளங்கள் ஒருபுறம் அல்லாஹ்வின் அழியாத நேசத்தாலும் அன்பாலும் நிறைந்திருக்கும். அவர்களின் உள்ளங்கள் இறைப் பண்புகள் வெளிப்படும் இடங்களாக இருக்கும். அதே சமயம், இந்த நபிமார்களுக்கு அல்லாஹ்வின் சார்பாக இறைவனின் படைப்புகளிடம் அனுதாபமும், பரிவும், அளவற்ற அன்பும் நிறைந்த உள்ளங்கள் வழங்கப்படு -கின்றன. இறைவனின் படைப்புகளிடம் பரிவு மற்றும் அனுதாபத்தின் எத்தகைய கடல் அலைகள் அவர்களின் உள்ளங்களில் அலைமோதும் என்றால் உலகியல் ரீதியான பௌதிக உறவுகளிலும், இன்னும் கூறுவதென்றால், உண்மையான பெற்றோர்களிடம் கூட இந்த உணர்வைக் காண முடியாது. நபிமார்களும், தூதர்களும் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் உண்மையே! அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இந்த உலகை விட்டுப் பிரிவது மனித கட்டாயமாகும். இயற்கையின் இந்த தொன்மையான சட்டத்திலிருந்து நபிமார்களும் விதிவிலக்கல்ல. ஆகவே, அவர்களும் இறுதியில் இந்த உலகை விட்டுப் பிரிந்து விடுகிறார்கள். ஆனால், நபிமார்களின் இருப்புடன் இணைந்திருக்கும் அருட்கொடைகளிலிருந்து உலகை ஒருபோதும் இழப்பிற்குரியதாக விட்டுவிடக் கூடாது என்று ஒவ்வொரு பொருளின் மீதும் பரவியுள்ள அல்லாஹ்வின் கருணை விரும்புகிறது. எனவே, நபிமார்கள் காலம் சென்ற பிறகு கிலா∴பத்தை நிலைநாட்டுவதன் மூலம் நபிமார்களின் பிரதிநிதியாக நிழல் வடிவத்தில் அவர்களின் அருட்கொடை -களை அல்லாஹ் தொடரச் செய்கிறான்.




அல்லாஹ் எப்போது ஒரு நபியை அனுப்பி வைத்தாலும் அவர் மூலமாக ஏற்படுத்தப்படும் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் ஆன்மிக சகோதரத்துவம் மற்றும் நேசத்தின் சரடில் கோர்க்கப்படுகிறார்கள். அவர்கள் ஒரு குடும்பத்தைப் போல, சகோதரத்துவத்துடன் புதிய வாழ்க்கையை வாழ்பவர்களாக இருப்பார்கள். நபியின் அருளாலும், அவரது துஆக்களின் மூலமாகவும் அவர்கள் ஒருவருக்கொருவர் அனுதாபம் உள்ளவர்களாகவும், நலம் விரும்புபவர்களாகவும், இன்ப

துன்பங்களில் பங்கெடுப்பவர்களாகவும், ஒருவருக்கொருவர் துஆ செய்பவர்களாகவும் இருப்பார்கள். அவர்களின் இதயங்களும் நாடித் துடிப்புகளும் ஒன்றாக துடிக்கும். இதற்கான உதாராணம் பொதுவான உலகியல் தொடர்புகளிலும், உலகியல் உறவுகளிலும் காணக் கிடைக்காது. அவர்கள் ஒரு இமாமுக்கு (நபிக்கு) கீழ்படிந்தவர்களாக அவரது சைகைகளுக்கேற்ப நடப்பார்கள். அவரது ஒரு கை அசைவில் எழுவார்கள்; (ஒரு கை அசைவில்) அமர்வார்கள். நபியின் இருப்பு அவர்களின் நம்பிக்கைகளின் மையமாகவும், அடிப்படையாகவும் இருக்கும். அவரது ஒவ்வொரு தூதுச் செய்தியையும், ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்றுவது இரு உலகங்களின் நற்பேறாக அவர்கள் கருதுவார்கள்.

இதே காட்சி மற்றும் இதே சூழ்நிலை, பரஸ்பர அன்பு நேசம் மற்றும் ஒற்றுமை ஒருமைப்பாட்டின் உணர்வு, நபிக்குப் பிறகு அவரது கலீ∴பாக்கள் மூலமாக நம்பிக்கை கொண்டவர்களுக்குள் ஊதப்படுகிறது. காலத்தின் கலீ∴பா தமது துஆக்கள், தூய்மைப்படுத்தும் ஆற்றல் மற்றும் பரிவு நேசம் ஆகியவற்றின் மூலமாக அவர்களின் உள்ளங்களை பரஸ்பர அன்பால் நிரப்புகிறார். அவரது இருப்பும் கூட



நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்துடைய விருப்பங்கள் மற்றும் நம்பிக்கைகளின் மையமாக மாறுகிறது. அவர்கள் அவருக்கு விலை போகாத அடிமைகளாக மாறி விடுகிறார்கள். அவரது ஒரு சைகையில் தங்களது உடல், உள்ளம் மற்றும் செல்வத்தை தியாகம் செய்ய எப்போதும் தயாராக இருப்பார்கள். காலத்தின் கலீ∴பாவின் தர்பிய்யத்தின் விளைவாக அவர்களின் நிலை எப்படி தலை கீழாக மாறி விடுகிறது என்றால் அவர்கள் 'உயிர், பொருள், கண்ணியம் ஆகியவை உமது பாதையில் அர்ப்பணம்' என்ற முழக்கத்தின் உண்மையான வடிவமாக மாறி விடுகிறார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலின் அருளால் நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்தை அல்லாஹ் சகோதரர்களாக ஆக்கி அவர்களுக்கிடையேயான மனக்கசப்புகளையும் வெறுப்புகளையும் நீக்கி விட்டான்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

"அல்லாஹ்வின் கயிற்றை நீங்கள் அனைவரும் உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள். உங்கள் மீது அல்லாஹ் பொழிந்த அருட்கொடையை நினைத்துப் பாருங்கள். நீங்கள் (ஒருவருக்கொருவர்) பகைவர்களாக இருந்தபோது, அவன் உங்கள் உள்ளங்களை பரஸ்பரம் இணைத்து விட்டான். பின்னர், அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள்." (சூரா ஆல இம்ரான் வசனம் 104)

சகோதரத்துவமும் சமத்துவமும், மார்க்கத்தின் அடித்தளமாகவும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் அடித்தளமாவும் உள்ளது. இது, நிறம் இனத்திற்கு அப்பாற்பட்ட, குலப்பெருமை எனும் பாகுபாட்டிலிருந்து தூய்மையான, மனித மாண்பை நிலைநிறுத்தும் ஒரு வாழ்க்கை கண்ணோட்டம் ஆகும். இதுவே அனைத்து மனிதர்களையும் மத, இன பாகுபாடின்றி ஒரே சரடில் கோர்க்கும் மையப் புள்ளியாகும்.

சுருங்கக்கூறின், பெருமானார் (ஸல்) அவர்கள் அனைவரையும் சகோதரர்களாக ஆக்கினார்கள். திருக்குர்ஆன் கூறுவது போல் اِنَّمَا الْمُؤْمِنُوْنَ اِخْوَةٌ "நிச்சயமாக, நம்பிக்கை -யாளர்கள் அனைவரும் சகோதரர்களே." (சூரா அல் ஹுஜுராத், வசனம் 11)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

أَنَّ الْعِبَادَ كُلَّهُمْ إِخْوَةٌ "நிச்சயமாக, அடியார்கள் அனைவரும் சகோதரர்கள்." (முஸ்னத் அஹ்மத்) எந்த அளவுக்கென்றால், அடிமைகளைக் கூட (தம்) சகோதரர்களாக ஆக்கினார்கள். நீங்கள் உண்பதையே அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் அணிவதையே அவர்களுக்கும் அணியக் கொடுங்கள் என்று கூறப்பட்டது.

حَتّٰى يُحِبَّ لِاَخِيهِ مَا يُحِبُّ لِنَفْسِهٖ ஒருவர் தனக்காக விரும்புவதையே தன் சகோதரனுக்காகவும் விரும்ப வேண்டும் என்று கூறினார்கள். நமது அன்பிற்குரிய தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் தம்மைப் பற்றிக் கூறும்போது, وَابْغُونِي فِي الضُّعَفَاءِ என்னை பலவீனமானவர்களிடத்தில் தேடுங்கள் என்றார்கள்.

இன்றைய தேவை என்னவென்றால், நாமும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தோழர்களின் முன்மாதிரியையும் வழிமுறையையும் தமதாக்கியவாறு நமக்கிடையே சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும். ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருக்காக அனுதாபம் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் வருகை, இதற்கு முன்னர் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் மூலம் இவ்வுலகில் நடைமுறைப்படுத்தப்பட்ட அதே வானளாவிய அமைப்பின் ஒரு பகுதியாகும். இந்த அமைப்பு அமைதி, சமாதானம், நல்லிணக்கம், பரஸ்பர பகைமைகளை அகற்றி ஏகத்துவச் செய்தியைப் பரப்பும் ஓர் அமைப்பாகும். இதன் மூலம் உலகின் அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனின் பெயரில் ஒன்று திரட்டப்படுவார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "ஐரோப்பா ஆசியா போன்ற பூமியின் பல்வேறு பகுதிகளில் வாழும் அனைத்து ஆன்மாக்களையும்,

நல்லியல்பு கொண்ட அனைவரையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்துதன் அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்க வேண்டும் என்பதே அல்லாஹ்வின் விருப்பமாக உள்ளது. இதுவே அல்லாஹ்வின் நோக்கமாகும். இதற்காகவே நான் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளேன்." (அல் வஸிய்யத், ரூஹானீ கஸாயின், தொகுதி 20, பக்கம் 306)

ஆகவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த பரஸ்பர சகோதரத்துவத்தையும் அனுதாபத்தையும் தம் வருகையின் பிரதான நோக்கமாகக் குறிப்பிட்டவாறு பைஅத்தின் பத்தாவது நிபந்தனையில் கூறுகிறார்கள்:

"அல்லாஹ்வுக்காக நல்ல விஷயங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் செய்து கொள்ளும் இந்த சகோதரத்துவ உடன்படிக்கையில் மரணமடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்றெல்லா உலகத் தொடர்புகளையும் விட இந்த சகோதர உடன்படிக்கை மிகவும் உயர்ந்ததாக இருக்கும் என்றும் உறுதி அளிக்கிறேன்."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் 1889-ஆம் ஆண்டில் பைஅத் வாங்க ஆரம்பித்தபோது அதனுடனே கிலா.்.பத் மற்றும் அதன் நிழலில் (பரஸ்பர) அனுதாபம், சகோதரத்துவ தொடர்பின் விதையையும் சேர்த்தே விதைத்தார்கள். இந்த இறை பைஅத்தின் மூலம் ஒரு மாபெரும் ஆன்மிக மரம் வளரும் என்றும், அதன் இனிமையான கனிகளின் கிளைகள் உலகம் முழுவதும் பரவும் என்றும், அதன் மூலம் பரஸ்பர அனுதாபம் மற்றும் சகோதரத்துவத்தின் நறுமணமிக்க கொடிகள் வளரும் என்றும், இவற்றின் மூலமாக நிகரற்ற, உறுதியான சகோதரத்துவத்தின் உலகளாவிய அன்பு மற்றும் நேசத்தின் உறவைக் கண்டு உலகம் வியப்பில் ஆழ்ந்து விடும் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த மகத்தான பைஅத் உறவில் இணைந்தவர்-களைப் பற்றிக் குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகிறார்கள்:

"மேலும் அவர்கள் சமூகத்தின் மீது எந்த அளவுக்கு அனுதாபம் காட்டுவார்கள் என்றால், ஏழைகளுக்கு அடைக்கலமாக மாறுவார்கள். அனாதைகளுக்கு தந்தையைப் போல இருப்பார்கள். மேலும், இஸ்லாமிய பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒரு பித்தனைப் போல அர்ப்பணம் ஆவதற்கு தயாராக இருப்பார்கள். மேலும் தங்களின் அனைத்து அருட்கொடைகளும் உலகில் பரவ வேண்டும் எனவும், இறை அன்பு மற்றும் இறையடியார்களின் மீதுள்ள அனுதாபத்தின் தூய ஊற்று ஒவ்வோர் உள்ளத்திலிருந்தும் வெளிப்பட்டு ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்து ஒரு நதியாக ஓடுவது தென்பட வேண்டும் எனவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வார்கள்." (மஜ்மூஆ இஷ்திஹாராத் - தொகுதி 1, பக்கம் 197-198)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய சொற்கள் என்னவென்றால் "இறையடியார்-களின் மீதுள்ள அனுதாபத்தின் தூய ஊற்று ஒவ்வோர் உள்ளத்திலிருந்தும் வெளிப்பட்டு ஒரே இடத்தில் ஒன்றுசேர்ந்து ஒரு நதியாக ஓடுவது தென்பட வேண்டும்" என்பதாகும்.

உண்மையில் இந்த சொற்களில் அஹ்மதிய்யா கிலா.்.பத்தின் உண்மையான வரைபடம் தென்படுகிறது. ஏனென்றால், இன்று இறை அடியார்களுடனான அனுதாபம் எனும் தூய ஊற்று ஒவ்வோர் உள்ளத்திலிருந்தும் வெளிப்பட்டு ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து எவ்வாறு ஒரு நதியாக ஓடுகிறது என்பதைப் பார்க்கிறோம். இறைவன் தனது கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்காக இரண்டாம் வல்லமையின் அருளை எவ்வாறு நம்மிடத்தில் ஏற்படுத்தி




-யுள்ளான் (என்பதை நாம் பார்க்கிறோம்). உலகில் இறைவன் மீதான நேசமும், உண்மையான மனந்திருந்தலும், தூய்மையான உண்மையான நன்மையும், அமைதி சமாதானம் மற்றும் மனித குலத்தின் மீதான அனுதாபமும் எவ்வாறு பரவி வருகிறது (என்பதை நாம் பார்க்கிறோம்).

நமது நேசத்திற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சமுதாய ஒற்றுமை தொடர்பாக கூறுகிறார்கள்:

முழுமையான வழிகாட்டியான பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பு நமக்கு கிடைத்தது மட்டுமின்றி, இக்காலகட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஜமாஅத்தில் இணையக் கூடிய நல்வாய்ப்பையும் இறைவன் வழங்கியுள்ளான். இது அஹ்மதிகள் மீது அல்லாஹ் செய்த மாபெரும் கருணையாகும். இந்த ஜமாஅத் ஓர் அமைப்பைக் கொண்டதாக உள்ளது. (இதில்) ஒரு கிலா.்.பத் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உங்கள் கைகளில் ஓர் உறுதியான பிடி உள்ளது. அது உடையாதது ஆகும். நினைவில் கொள்ளுங்கள்! இந்த பிடி உடையாதுதான்! ஆனால் நீங்கள் உங்கள் கைகளை சற்றே தளர்த்தினால் நீங்கள் உடைந்து போவதற்கான வாய்ப்பு உருவாகலாம். அல்லாஹ் அனைவரையும் அதிலிருந்து பாதுகாப்பானாக! அல்லாஹ்வின் கயிறை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஜமாஅத் அமைப்புடன் எப்போதும் ஒன்றியிருங்கள். இந்தக் கட்டளையை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், இப்போது அது இல்லாமல் நீங்கள் பிழைக்க முடியாது." (அல் ்.பஸ்ல் இன்டர்நேஷனல், அக்டோபர் 17, 2003, பக்கம் 5)

ஆகவே, கிலா.்.பத்தின் அருளால் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் ஆன்மிக சகோதரத்துவம் மற்றும் அன்பின் சரடில் கோர்க்கப்படுகிறார்கள். காலத்தின் கலீ.்.பா அவர்கள் தமது துஆக்கள், தூய்மைப்படுத்தும் ஆற்றல் மற்றும் பரிவு

நேசத்தின் மூலமாக அவர்களின் உள்ளங்களை பரஸ்பர நேசத்தால் நிரப்புகிறார். அவரது இருப்பு நம்பிக்கை கொண்டோரின் ஜமாஅத்துடைய ஆசைகள், விருப்பங்கள் மற்றும் நம்பிக்கைகளின் மையமாக ஆகிவிடுகிறது. அவர்கள் ஒரு குடும்பத்தைப் போல, சகோதரர்களாக மாறி, புதிய வாழ்க்கையை வாழ்பவர்களாக இருப்பார்கள். கிலா.்.பத்தின் அருளாலும், அவரது துஆக்களின் மூலமாகவும், அவர்கள் பரஸ்பரம் அனுதாபம் கொள்ளக் கூடியவர்களாகவும், நலம் விரும்பிகளாகவும், இன்ப துன்பங்களில் பங்கெடுப்பவர் -களாகவும், ஒருவருக்கொருவர் துஆ செய்பவர்களாகவும் இருப்பார்கள். அவர்களின் இதயங்களும், அவர்களின் நாடித் துடிப்புகளும் ஒன்றாக துடிக்கின்றன. அதற்கான உதாரணம் பொதுவான உலகியல் தொடர்புகளிலும், உறவுகளிலும் காணக் கிடைக்காது. கிலா.்.பத் அவர்களின் நம்பிக்கைகளின் மையமாகவும், அடித்தளமாகவும் ஆகி விடுகிறது. அதனுடைய ஒவ்வோர் அறிவுரையையும், கட்டளையையும் நிறைவேற்றுவதை அவர்கள் இரு உலகங்களின் நற்பாக்கியமாக கருதுவார்கள்."

நம்முடைய எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

உங்களுடைய சிறந்த இமாம்கள் யார் என்றால், நீங்கள் அவர்களை நேசிப்பீர்கள். அவர்கள் உங்களை நேசிப்பார்கள். நீங்கள் அவர்களுக்காக துஆ செய்வீர்கள். அவர்கள் உங்களுக்காக துஆ செய்வார்கள். (முஸ்லிம், கிதாபுல் இமாரா)

கிலா.்.பத் அமைப்பின் எண்ணற்ற அருள்களில் ஒன்று, காலத்தின் கலீ.்.பாவுடைய தோற்றத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்திற்கு வேதனையுடன் துஆ செய்பவர் கிடைப்பதாகும். காலத்தின் கலீ.்.பா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறையை பின்பற்றியவாறு நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்திற்கு எவ்வாறான ஒரு தந்தையைப் போல் இருக்கின்றார் என்றால், அவரது அரவணைப்பில் நேசம் எனும் கதகதப்பும், பாதுகாப்பும், உணர்திறன் மற்றும் துஆக்களின் கருவூலங்களால் அனைத்து ஜமாஅத் உறுப்பினர்களும் தங்கள் பைகளை நிரப்புகிறார்கள். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர உலகத்தில் வேறு யாருக்கும் கிடைக்காத ஓர் அருளாகும்.

இதைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

"உங்களுக்காக ஒரு நபர் இருக்கிறார். அவர் உங்கள் வலியை உணர்பவர். உங்களை நேசிப்பவர். உங்கள் துன்பத்தை தனது துன்பமாக கருதுபவர். உங்கள் கஷ்டத்தை தனது கஷ்டமாக அறிபவர். உங்களுக்காக அல்லாஹ்வின் முன்னிலையில் துஆ செய்பவர். ஆனால், (பிற மக்களாகிய) அவர்களுக்கு அப்படி யாரும் இல்லை! உங்களைப் பற்றி அவருக்கு அக்கறையும் வேதனையும் உள்ளது. அவர் உங்களுக்காக தனது இறைவனின் முன்னிலையில் துடிதுடிக்கிறார். ஆனால், (பிற மக்களாகிய) அவர்களுக்கு அப்படி யாரும் இல்லை. யாரேனும் ஒருவருக்கு வேண்டப்பட்டவர் நோயாளியாக இருந்தால் அந்த நபருக்கு நிம்மதி இருக்காது. ஆனால் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான நோயாளிகளைக் கொண்ட ஒருவருடைய நிலையை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியுமா என்ன?"

(அன்வாருல் உலூம், தொகுதி 2, பக்கம் 156)

(தொடரும்...)

## ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:




**உண்மை என்னவென்றால், கிலாஃபத் இல்லாமல் உலகின் எந்த அமைப்பும் ஒற்றுமையை உருவாக்க முடியாது. நீங்கள் பல பிரிவுகளைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் கிலாஃபத்தின் கீழ் நீங்கள் கடைபிடிக்கும் ஒற்றுமை வேறு எந்த எந்தப் பிரிவிலும் இல்லை.**

(ஜுமுஆ பேருரை 13.09.1987)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam